Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNODDAM

வெளியீடு-58 | 20 பெப்ரவரி 2011 | விலை: 10.00

# உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் மாற்றத்திற்கு அடிகோலுமா?

### மக்கள் நலன் காக்கும் கொள்கைகளில்லாது தடுமாறுகின்றது ஆட்சி! ஐ.தே.க விடம் மீட்சிக்கான வாக்குமில்லை வழியுமில்லை!

### சரியானவை எவையென்று தேர்ந்தெடுக்கத் தெரியாவிட்டாலும் பிழையானவற்றை எதிர்ப்பதே சாமான்யர்களின் அரசியல்

யுத்தம் முடிந்ததும் தமது வாழ்வில் முன்னேற்றம் வரும் என எண்ணிய மக்களிடையே நிலவுகின்ற ஆத்திரம், உணவுப் பொருட்களின் விலைகள் மலைகள் போல் உயர்ந்திருப்பதால் விசனப்பட்டிருக்கும் மக்களிடையே நிலவும் விரக்தி, யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தமக்குரிய உதவிகள் உரிய காலகட்டத்தில் போதிய அளவு கிடைக்காததால் அவர்களிடையே நிலவுகின்ற சோகங்கள், மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்டு சகலதையும் இழந்த நிலையில் இருப்போர் தமக்கு போதிய உதவி தரப்படவில்லை என்பதால் கொண்டிருக்கும் கோபம், அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் மதிக்கப்படவில்லை எனக்கருதும் ஜனநாயக சக்திகளின் வெறுப்பு, சமூக சேவைத் தொண்டர் அமைப்புக்கள் மீதான அரச கட்டுப்பாட்டால் அவற்றிடையே நிலவும் அதிருப்தி, மஹிந்த நடத்துவது ராஜபக்சாக்களின் குடும்ப எதேச்சாதிகார ஆட்சியே எனும் எதிர்க்கட்சிகளின் கருத்து மக்கள் மத்தியிலும் பலம் பெற்று வருகின்றமை, மேலும் ஆளும் கட்சி அமைச்சர்களிடையே அதிகரித்து வரும் சகிப்பின்மை போன்ற பல்வேறு காரணிகள் இப்போதைய அரசாங்கத்துக்கு எதிராக மக்களின் நம்பிக்கையின்மையை படிப்படியாக வலிமைப்படுத்தி வருகின்றன என்பது வெளிப்படை. வலுப்பெற்று வரும் மேற்குறிப்பிட்ட போக்குகள் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பெறுபேறுகளிலும் பிரதிபலிக்கக் கூடும்.

இருபத்தைந்து ஆண்டுகால பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தில் வெற்றியை சாதித்ததற்காக மக்கள் மத்தியில் ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசாங்கம் பெரும் மதிப்பையும் அமோகமான ஆதரவையும் பெற்றிருந்தது. அது இப்போது குறைந்து வருகின்றதா என்பது ஆய்வுக்குரிய ஒன்றே! அந்த வெற்றிப்பெருமிதம் தேசிய அளவிலான தேர்தல்களில் முக்கியத்தவம் பெறலாம். ஆனால் அந்தப் பெருமிதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களோடு தொடர்புபட்டிருக்கின்றது என்று கூற முடியாது. ஆட்சிக்கு வந்த போது தலாநபர் தேசிய வருமானம் ஆயிரம் டொலர் என்று இருந்ததை இரண்டாயிரத்து ஐந்நூறு டொலர் அளவுக்கு உயர்த்தியது தமது பொருளாதாரக் கொள்கையின் விளைவே என ஜனாதிபதி பெருமையாகக் கூறிக் கொண்டாலும் அதில் எவ்வளவு உண்மை உண்டு என்பதை விட அதனால் பர

(தொடர்ச்சி 3ம் பக்கம் பார்க்க)

## வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட 60 உள்ளூராட்சி மன்றங்களுக்கு மார்ச் 17 இல் தேர்தல் இல்லை

வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட 60 உள்ளூராட்சி மன்றங்களுக்கு மார்ச் 17ம் திகதி தேர்தல் நடைபெறாது என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. யாழ்மாவட்டத்தின் 16 சபைகளும் கிளிநொச்சி மாவட்டத்தின் 3 சபைகளும் இவற்றில் அடங்கும். இந்த 19 சபைகளிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தது. தமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் கட்சிகள் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குகளை தாக்கல் செய்துள்ளமையால், குறித்த வழக்கு விசாரணைகள் முடிவுற்றதும் இந்தஉள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடாத்துவதற்கு பொருத்தமான பிறிதொரு தினத்தை தேர்தல் திணைக்களம் அறிவிக்கும் என திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கண்ணீர் வடிக்கவிட்டு வழிந்தோடிய வெள்ளம்

### மட்டக்களப்பு மாவட்டத்தில் நெற்செய்கை பாதிப்பு, கால்நடைகள் இறப்பு

### நெற்செய்கைக்கு ஏற்பட்ட பாதிப்பு

அண்மையில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் மட்டக்களப்பு மாவட்ட பெரும்போக வேளாண்மை செய்கை பலத்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

இம்மாவட்டத்தில் மொத்தமாக பெரும்போக வேளாண்மை 1 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் செய்கை பண்ணப்பட்டது

அரசாங்க அனுமதி பெற்று விதைக்கப்பட்ட வயல் 1 இலட்சத்து 49 ஆயிரத்து 657 ஏக்கர் (பொரும்போக பதிவில் உள்ளவை)

வெள்ளம் காரணமாக 1 இலட்சத்து 43 ஆயிரத்து 560 ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளது இது 90 சத வீத பாதிப்பாகும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சாதாரணமாக 3 இலட்சத்து 12 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் உற்பத்தி எதிர்பார்க்கப்பட்டது

இதில் 1 இலட்சம் மெற்றிக்தொன் உணவுக்காக பயன்படுத்தப்படுகின்றது. எஞ்சியவை விற்பனை செய்யப்படுவது வழமையாகும்

எதிர்பார்ப்புக்கு மாறாக 2 இலட்சத்து 97 ஆயிரம் மெற்றிக்தொன் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது.

வெள்ள பாதிப்பின் காரணமாக 15 ஆயிரம் மெற்றிக் தொன் மட்டுமே நெல் அறுவடை செய்ய முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

1751 விவசாயிகள் 42 இலட்சத்து 59 ஆயிரத்து 503 ரூபாவிற்கு காப்புறுதி செய்துள்ளனர். இவர்களுக்கு மட்டுமே நஷ்ட ஈடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1 இலட்சத்து 37 ஆயிரம் ஏக்கருக்கு எந்தவித பாதிப்புக் கொடுப்பனவுகளும் வழங்க உறுதியான தீர்மானம் எதுவும் இல்லை. ஆனால், மானிய உரமும், விதைநெல்லும் மட்டும் வழங்கப்படுமென கூறப்படுகின்றது.

மழை ஏற்படுத்திய இழப்பு ஒருபுறமிருக்க இந்த அறிவிப்பு மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளை மேலும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

### கால்நடைகள் இறப்பால் இழப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 41 ஆயிரத்து 897 மாடுகள், 28 ஆயிரத்து 596 ஆடுகள், 1 இலட்சத்து 17 ஆயிரத்து 276 கோழிகள் என்பன இறந்துவிட்டதாகவும் 11 பிரதேசசெயலாளர் பிரிவுகளில் 10 ஆயிரத்து 474 எருமைகள் இறந்துவிட்டதாகவும் பெப்ரவரி 11ம் திகதி வரை மட்டக்களப்பு மாவட்ட கால்நடை மருத்துவ உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

## இரணைமடு குடிநீர்த் திட்டம்

### கிளிநொச்சியின் விவசாயத்தையும் அழித்து குடிநீருக்கு காத்திருக்கும் யாழ் குடாநாட்டு மக்களையும் ஏமாற்றும் செயற்திட்டம் -வீ. ஆனந்தசங்கரி



இரணைமடுக் குளத்திலிருந்து யாழ் குடாநாட்டிற்கு குடிநீர் வழங்க ஓர் புதிய திட்டத்தை அரசு பலகோடிரூபா செலவில் உருவாக்குவதற்கு நான் ஆட்சேபணை செய்து வருவதை சிலர் தவறாக விமர்சிப்பதால் இந்த இரணைமடு குடிநீர் திட்டம் பற்றிய எனது நிலைப்பாட்டை யாழ் குடாநாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய கடமை எனக்குண்டு. கிளிநொச்சி மாவட்டம் தான் யாழ் மாவட்டத்தின் நெற்களஞ்சியமாக விளங்குவதால், இத்திட்டம் எவ்வாறு யாழ்குடா நாட்டு மக்களையும், விவசாயத்தை வருமானமாகவும், வாழ்வாதாரமாகவும் கொண்ட கிளிநொச்சி மக்களையும், விமோசனப்படுத்தும்? எனவே இரு சாராரும் இதனைப் புரிந்து கொண்டு ஆதரவு வழங்குவதா? வேண்டாமா? என்பதை தீர்மாணிக்க வேண்டும்

முதலாவதாக இத்தகைய பாரிய தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய ஒரு திட்டத்தை உருவாக்க எண்ணியவர்கள் இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி கிளிநொச்சி வாழ் விவசாயிகளின் கருத்துக்களை தெரிந்து கொள்ளாதது பெரும் தவறாகும். கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்தின் கீழ் குடியேற்றத்திட்டங்கள் கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக வட்டக்கச்சி, இராமநாதபுரம், குமரபுரம், முரசுமோட்டை எட்

(தொடர்ச்சி 6 ம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடாதது ஏன்?

### பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்) வெளியிட்ட ஊடக அறிக்கை

தமிழர்களின் அரசியற் கட்சிகளிற்கிடையிலான ஐக்கியத்தையும் எமது கட்சியின் நிலையையும் கருத்தில் கொண்டு இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் நாம் பங்கு பற்றுவதில்லை என தீர்மானித்துள்ளோம். இதனை எமது கட்சியின் ஆதரவாளர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறியத் தருவது காலத்தின் தேவை என்பதைக் கருத்திற் கொண்டே இவ்வறிக்கையை வெளியிடுகின்றோம்.

தமிழ் மக்களுக்கான ஓர் அரசியல் அதிகார விடுதலையைப் பெறல், சமூக அடிமைத்தளைகள் ஒடுக்கு முறைகளை ஒழித்தல், பொருளாதார சமத்துவ சமுதாயத்தை நிலைநாட்டல், முற்போக்கான சர்வதேச உறவுகளை வலுப்படுத்துதல் என்ற அடிப்படையில் தோழர் நாபாவின் வழிகாட்டலில் ஒரு புரட்சிகர இயக்கமாகச் செயற்பட்ட நாம் காலப்போக்கில் தேர்தல்களில் பங்குபெறுவதற்கும் முக்கியத்துவமளிக்க வேண்டியவர்களானோம். புலிகள் வல்லமை கொண்டவர்களாக இருந்த போது மக்களோடு உறவுகளைப் பேணுவதற்கும் எமது அரசியல் வேலைத்திட்டங்களை மக்கள் மத்தியில் தக்க வைப்பதற்காகவும் நாம் தேர்தல்களில் பங்குபற்றினோம். இன்று மக்களோடு நெருங்கிப் பழகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இருப்பினும் தேர்தல்களில் எமது கட்சி வெற்றிகரமான ஒன்றாக இருப்பதற்கான மக்கள் பலம் இப்போது எம்மிடம் இல்லை. அதனை வெற்றிகரமாக ஆக்குவதற்கான கட்சிக் கட்டமைப்புப் பலத்தையும் நாம் இன்னமும் அடையவில்லை, தேர்தல்களைச் சந்திக்கும் பணபலமும் எம்மிடமில்லை.

இந்நிலையில் தேர்தல் ஒன்றைச் சந்திப்பதானால் தமிழர்களிடையேயுள்ள கட்சிகளுக்கிடையில் ஓர் ஐக்கியம் ஏற்படும் பட்சத்தில் நாமும்

(தொடர்ச்சி 3 ம் பக்கம்)


குறும்பன் கூறும் குசும்புகள்




பக்கம்- 03

டெல்லி கொழும்பு யாழ்ப்பாணம்



பக்கம்- 04





பக்கம்- 05

தோழர்களை நினைவு கூருவோம்



பக்கம்- 06

அன்பார்ந்த நண்பர்களே தோழர்களே



பக்கம்- 07

# கண்ணோட்டம்

Kannoddam



## இயற்கையின் சவால்களும் துன்பசாகரத்தில் உழலும் மக்களும்

இரண்டு மாத கால இடைவெளியில் அடுத்தடுத்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சுமார் 2 மில்லியன் மக்கள் இலங்கையில் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு தடவைகளிலும் பாதிக்கப்பட்டவர்கள் அனேகமாக மட்டக்களப்பு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்களும், வன்னி மக்களுமே. மலையகத்திலும் ஆங்காங்கே மண்சரிவுகள் ஏற்பட்டன. இம்முறை அனுராதபுரம், பொலநறுவை உள்ளிட்ட வட மத்திய மாகாணமும் பாரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது.

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது போல் அண்மைய ஏழு வருடங்களில் வடக்கு கிழக்கு மக்கள் சுனாமி, யுத்தம், சூறாவளி, பெருவெள்ளம் என அனர்த்தங்களைச் சந்தித்து வருகிறார்கள். யுத்தம் ஓய்ந்து விட்டாலும் இயற்கை அனர்த்தம் மக்களின் வாழ்வில் நிரந்தரமாகி வருகிறது.

வறியவர்களான, பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்று சேர்ந்துள்ள உதவிகளின் அளவு யானைப் பசிக்கு சோளப்பொரி என்பது போல் தான் இருந்தது.

வெள்ளத்தினால் பல கிராமங்கள் துண்டிக்கப்பட்டன. உயிரைப் பிடித்து வைப்பதற்கு உயரமான இடங்களைத் தேடி மக்கள் அலையவேண்டி இருந்தது. இந்தப் பிரதேசங்களில் புதிதாக நிறுவப்பட்ட உள்ளகக் கட்டமைப்புக்கள் வீதிகள் பாரிய அளவில் சேதமடைந்துள்ளன.

உதாரணமாக அனுராதபுரத்துக்கும் புத்தளத்துக்கும் இடையே போடப்பட்ட வீதியை மழை கழுவிக் கொண்டு போய்விட்டது. அந்த வீதியை இப்போது காணமுடியவில்லை. அழகாகக் காணப்பட்ட வீதி அரிதாரப் பூச்சு என அமைந்தமை இப்போது அம்பலப்பட்டிருக்கிறது. தாண்டிக்குளத்துக்கும் சாவகச்சேரிக்கும் இடையேயான ஏ 9 வீதி அபாயமான குண்டு குழிகளால் நிறைந்து காணப்படுகிறது. மக்களின் புனர்வாழ்வின் போராலும் புனர்நிர்மாணத்தின் பேராலும் உதவிகள் பெறப்பட்டு ஏதேதோ பெருச்சாளிகள் பசியாறுகின்றன என்பது தெரிகிறது..

தவித்த முயலடிக்கும் கணக்காக மக்களுக்கெதிராக நிகழும் குற்றங்கள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.. இலங்கையில் வெள்ளை வேட்டி கட்டிய ஈவிரக்கமற்ற களவாணிக் கூட்டங்கள் பெருகி வருகின்றன. இவை மக்களின் இயற்கை வளங்களையம் வெளிநாடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உதவிடும் வளங்களையும் தோலிருக்கச் சுளை விழுங்கிகள் போல் சூறையாடிவிடுகின்றன. இந்தப் போக்கில் மாற்றம் ஏற்படாவிட்டால் உதவி செய்ய முன்வரும் நாடுகள் சர்வதேச ஸ்தாபனங்கள் விரக்தி அடையும் நிலையேற்படும். யாரும் இந்த நாட்டுக்கு உதவ முன்வர மாட்டார்கள்.

அழிந்த வீடுகள் உடைந்த வீதிகள் பாலங்கள் குளங்கள் எல்லாமே மறுநிர்மாணம் செய்யப்பட வேண்டும். சமுதாய ஏணியின் அடிமட்டத்தில் வாழும் எமது நாட்டு மக்களுக்கு சிறப்பானதும் பாதுகாப்பானதுமான வாழ்க்கை தேவை.

புலம்பெயர்ந்து ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் வாழ்பவர்கள் இந்த நாட்ட மக்களுக்கு உதவிட முன்வர வேண்டும். உதவிகள் உண்மையில் மக்களைச் சென்றடைகின்றன என்பதை பகிரங்கமாக அறியக்கூடிய வகையில் உதவிகள் வழங்கப்பட வேண்டும். மேலும் சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் வடக்கு கிழக்கில் யுத்தத்தாலும் இயற்கையாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி உதவுவதற்கு இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும்.

ஏற்கனவே வன்னியின் மீளக் குடியேறும் மக்களுக்கான மறுவாழ்வுப் பணிகள், புனர்நிர்மாணப் பணிகள் நேர்த்தியில்லாமல் சீர்கெட்டிருப்பதற்கு அரசே தார்மீகப் பொறுப்பேற்று அவற்றைச் சரிப்படுத்துவதோடு அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள், சமூக ஆர்வலர்களின் ஈடுபாடுகள் மற்றும் அரசியல் கட்சிகளின் சமூக இயக்கங்கள் சுதந்திரமாக நடைபெறுவதற்கு அரசு நேரடியாகவும் மறைமுகமாகவும் விதித்துள்ள தடைகள் நீக்கப்பட வேண்டும்

அபிவிருத்தி என்பது மக்கள் அவரவரது பழைய இடங்களுக்குச் செல்வது என்பதோ ஆங்காங்கே பாலங்கள் கட்டுவதுவும் வீதிகளுக்கு தார்ப்பசை போடுவது என்பதோ அல்ல. மூலதனங்கள் இடுவதில் அச்சமும் அச்சுறுத்தல்களும் நிலவக் கூடாது. பொருளாதார உட்கட்டமைப்புக்களின் வளர்ச்சி வேகம் முலதனங்களையம் தனியாரின் பொருளாதார முயற்சிகளையும் தானாக தூண்ட வேண்டும். அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு போதிய அவிபாகம் கொடுத்தால்த்தான் முதலீடுகளும் வர்த்தக விருத்திகளும் சாத்தியம் என இருக்கும் போது மோசடி இலாபம் ஈட்டும் பேர்வழிகள் மட்டும்தான் உற்சாகமாக இருப்பார்கள். நாட்டில் வேலைவாய்ப்புக்களின் வளர்ச்சி மக்களின் அடிப்படை உரிமைகளோடும் சுயகௌரவத்தோடும் தொடர்புடைய விடயமாகும். மாறாக அதிகாரத்தில் உள்ளவர்களால் பிச்சை போடும் ஒரு விடயமாக அது அமையக் கூடாது.

அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் சுதந்திரமானதும் நீதியானதுமான சூழல் இங்கே அவசியப்படுகிறது. பாதிக்கப்பட்ட பகுதி மக்களின் ஈடுபாட்டுடன் நட்புறவான சூழுலில் பணிகள் நடைபெற வேண்டும்.

மூலைக்குமூலை அரசபடைகளின் பிரசன்னத்துடன் தாம் ஒவ்வொருவரும் கண்காணிக்கப்படுகிறோம் என்ற உறுத்தலுடன் மக்கள் இருக்கும் வரை இங்கு ஏனோ தானோ என்ற நிலைதான் காணப்படும். தமது படைகள் என்ன செய்கின்றன என்பதை அரசும் அறிய முடியா நிலையும் வளரும்.

வெறுமனே தேர்தல்களை மட்டும் அடிக்கடி நடத்தி ஜனநாயக முன்னேற்றத்தையும் சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் நிலையையம் விருத்தி செய்துவிட முடியாது. உணவுக்கும் இருப்பிடத்திற்கும் மக்கள் அலைந்து கொண்டிருக்கும் போது பெருநோய்கள் பரவும் அபாயம் இருக்கும் போது இந்த மக்களுக்கு குறைந்தபபட்ச இயல்பு வாழ்க்கை கிடைபப்பதற்கான மயற்சிகள் மெற்கொள்ளப்பட வேண்டும்

ஜனநாயக சமூகத்தில் தேர்தல் ஒரு முக்கியமான அம்சம் ஆனால் எமது தேர்தல் முறை தன்னடக்கமானதாக இல்லை. அது பகட்டும் ஆடம்பரமும் பணமும் வன்முறையுடனும் சம்மந்தப்பட்டிருக்கிறது. மக்கள் இயல்பாக வாழாத சூழ்நிலையில் இவை அதிகரிக்கவே செய்யும். தற்போது தேர்தல் என்பது மக்களைப் பொறுத்த வரை எரிச்சலை ஏற்படுத்தும் அசௌகரியமான ஒன்றாகவே உணரப்படுகிறது.

மக்களுக்கு முன் புதிய புதிய மேய்பார்களை திணிக்கும் முயற்சிகளால் பலனில்லை. சமூகத் தலைவர்கள் மக்கள் மத்தியில் இருந்து இயல்பாகவே எழுச்சி பெறுவர் அதற்கான வன்முறையற்ற சமூக ஜனநாயக இடைவெளி நிரந்தரமானதாக வடக்கு கிழக்கில் உருவாக்கப்பட வேண்டும்.

சமூக வாழ்வில் ஜனநாயத்தின் கூறுகளைப் பாதுகாப்பதே சமூக அபிவிருத்திப் பணிகளுக்கும் சரி, அனர்தங்களின் போது மக்களுக்கு உதவுவதற்கும் சரி முதல் நிபந்தனையாகும்.

# தேன்வந்து பாயுது காதினிலே

## தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் கப்பல் சேவை விரைவில்

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணிகள் கப்பற் போக்குவரத்துச் சேவையை மார்ச் மாதத்தில் ஆரம்பிப்பதற்காக இந்திய இலங்கை அரசுகள் துரித முயற்சிகளை எடுத்தக் கொண்டிருக்கின்றன. இக்கப்பலில் ஒரே நேரத்தில் ஐந்நூறு பேர் பயணிக்கலாம் என்றும் ஒவ்வொரு பயணிகளும் நூறு கிலோ வரை பொருட்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது

## பொலிஸ் சேவையில் மேலும் 2500 தமிழ், முஸ்லிம் இளைஞர் யுவதிகள்

பொலிஸ் சேவையில் மேலும் 2500 தமிழ், முஸ்லிம் இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸ் மா அதிபர் கலாநிதி மஹிந்த பாலசூரிய தெரிவித்தார். ஏற்கனவே கொன்ஸ்டபிள் தரத்தில் 500 பேரை இணைத்துக் கொண்டுள்ளதுடன், புதிதாக உப பரிசோதகர்கள், பெண் பொலிஸ் பரிசோதகர்கள், பெண் கொன்ஸ்டபிள்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும், தற்போது அதற்கான நேர்முகத் தேர்வுகள் நடைபெற்று வருவதாகவும், பொலிஸ் மா அதிபர்

## 20 வருடங்களுக்கு பின் தமது சொந்த இடங்களுக்கு திரும்பும் வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் 12 கிராமசேவையாளர் பிரிவுகளில் மிதிவெடிகள் அகற்றப்பட்டதற்கான சான்றிதழ் கிடைக்கப்பெற்றுள்ளதாக, மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார். நான்கு பிரதேச செயலர் பிரிவு மற்றும் ஒரு அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள 12 கிராமசேவையாளர் பிரிவுகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதற்கான சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஜே 150 மாதகல் கிழக்கு, ஜே 154 மாரிசன் கூடல், ஜே 155 இளவாலை, ஜே 208 புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஜே 228 தெல்லிப்பளை, ஜே 238 கட்டுவன், ஜே 239 கட்டுவன் மேற்கு, ஜே 242 குரும்பசிட்டி, ஜே 243 குரும்பசிட்டி கிழக்கு, ஜே 244 வசாவிளான் கிழக்கு, ஜே 281 பத்தமேனி, ஜே 283 இடைக்காடு, ஜே 284 வளளாய் மற்றும் ஜே 287 அச்சுவேலி மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதற்கான சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த விபரங்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காக யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். அவ்வாறாயின் மிகவிரைவில் மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு மக்கள் மீண்டும் சென்று குடியேறும் வாய்ப்பு கிடைக்கும் என கடந்த இருபது ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் அகதிகளாக இருக்கும் பல்லாயிரம் குடும்பங்கள் எதிர்பார்த்திருக்கின்றன.

## உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் மாற்றத்திற்கு... (1ம் பக்கத் தொடர்ச்சி)

ந்துபட்ட பொதுமக்களுக்க எவ்வளவு நன்மை ஏற்பட்டுள்ளது என்பதற்கே மக்கள் தீர்ப்பளிப்பர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தேசியம், ஒருமைப்பாடு, தேச பாதுகாப்பு, இறைமை, சுயநிர்ணய உரிமை என்பவற்றைவிட மக்களின் வயிற்றுப்பாடும் அன்றாட வாழ்வுப்பாடும் முக்கியத்துவம் பெறுகின்றன. இங்கு கட்சிகள் என்னும் காரணியை விட ஊரவன், சாதிக்காரன், சமயக்காரன் என்னும் காரணிகள் அதிகமாகவே நிர்ணயிக்கின்றன.

இங்கு பொது அம்சங்களின் பாத்திரங்களும் புறக்கணிப்பதற்கில்லை. தமிழர்கள் மத்தியில் பரவலாக நிலவும் அரசுக்கு எதிரான உணர்வே தமிழர்களின் வாக்களிப்பைத் தீர்மானிப்பது போல மறுபுறம் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையின் மீது சிங்கள மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையீனமே அரசாங்கத்துக்கு வாய்ப்பான முறையில் சிங்கள மக்களின் வாக்களிப்பைத் தீர்மானிக்கிறது என்றால் மிகையாகாது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையானது ரணில் குழு, கரு ஜெயசூரியா குழு, சஜித் பிரேமதாசா குழு என பிளவுபட்டுப் போயிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியற் கொள்கைகள் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவுமில்லை நம்பிக்கையுமில்லை. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களே தமது கட்சியின் கொள்கைகள் மீது தெளிவின்மையும் நம்பிக்கையீனமும் கொண்டிருக்கிறபோது பொதுமக்கள் மத்தியில் அவ்வாறான நிலைமை காணப்படுவது ஆச்சரியத்துக்குரிய ஒன்றல்ல.

ராஜபக்ஷ சகோதரர்கள் ஒருவருக்கொருவர் வழங்கும் ஒத்தாசை தம்பியுடையான் படைக்கஞ்சான் என்னும் வகையில் ஜனாதிபதி மஹிந்தவின் பலமாக உள்ளது. நாட்டின் இராணுவ மற்றம் பொலிஸ் தலைமைகள் ஆட்சிக்கு வழங்கும் அசாதாரண ஒத்துழைப்புகள் அவரை வலிமையாக வைத்திருக்கின்றன. ஆனால் நாட்டின் பொருளாதார நிலைமையின் போக்கோ, அரசின் அரசியல் அணுகுமுறைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பாக நாட்டிலுள்ள ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளிடையே அதிகரித்துக் கொணடிருக்கும் அதிருப்தியோ, ஜனாதிபதி தொடர்பாக உலகநாடுகள் கடைப்பிடிக்கும் தந்திரங்களின் தன்மைகளோ ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக்கு ஆரோக்கியமானவைகளாகக் காணப்படவில்லை.

ஆனைக்கும் அடி சறுக்கும் என்பார்கள். அது போல எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் அரசாங்கத்துக்கு ஏற்படும் சிறு சறுக்கலும் ஆட்சியின் வீழ்ச்சியை நோக்கிய தொடர்ச்சியான சறுக்கலுக்கே வழிவகுக்கும். இதைத் தடுப்பதற்காக அரசாங்கம் கண்மூடித்தமான அதிகார துஷ்பிரயோக கொள்கைகளைக் கடைப்பிடித்தால் அவையும் அந்த வீழ்ச்சிப் போக்கை துரிதப்படுத்தவே உதவும்.

உள்ளூராட்சித் தேர்தலில் அரசு எதிர்பார்கும் சாதகத்தைப் பெற்றுக் கொண்டாலும் தலைதப்பியது தம்பிரான் புண்ணியம் என்றே அவர்கள் கொள்ள வேண்டும். அந்நிலையில் அரசாங்கம் தனது அரசியல் பொருளாதார அணுகுமுறைகளை மீள்பரிசிலனை செய்து சரிப்படுத்திக் கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பமாகவே கருத வேண்டும்.

இப்போதைய ஆட்சியாளர்கள் தமது செல்வாக்கின் உச்சக்கட்டத்தை எப்போதோ அடைந்து விட்டார்கள் என்பது தெளிவு. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் எவ்வாறாக அமைந்தாலும் இதற்கு மேல் உயரப் போக அவர்களுக்கு இடமில்லை. அவர்கள் எது செய்தாலும் இருப்பதைத் தக்க வைப்பதற்காகவென்றே அமையும் தமது வீழ்ச்சிக் கட்டத்தில் காலடி எடுத்து வைக்காமல் இருப்பது ராஜபக்ஷ சகோதரர்களின் நிதானத்திலும் அவர்கள் சாரும் நண்பர்களிலும், அனைத்து மக்கள் பிரிவினதும் நலன் கருதியதாக அவர்கள் கொள்ளும் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளிலுமே தங்கியிருக்கின்றன.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள், ஆக்கங்களை வரவேற்கிறோம். அனைத்து நேரடி தொடர்புகளுக்கும்:-

EPIC
PO BOX 431
SUTTON SM1 9LE
UK
email: eprlfp@yahoo.co.uk

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

29 A, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
065 2225179

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

310, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
021 2222022

159, கடல்முக வீதி
திருகோணமலை.
026 2227118

# குறும்பனின் சும்புகள்



**வெளிவந்த செய்தி:-** தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்க தமிழர்கள் தங்களுக்கு பக்கபலமாக இருக்க வேண்டும் என்றும் எத்தனை தேர்தல்கள் வந்தாலும் தமிழர் கள் தங்களுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும் என்றும் தமது உயிரைத் தவிர தாம் எல்லாவற்றையும் இழந்து தமிழர்களுக்கு சேவை செய்வதாகவும் எனவே தமிழர்கள் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ தமிழ்க் கூட்டமைப்பின் கரங்களை வலுப்படுத்தும் படி வுவுனியாவைச் சேர்ந்த தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கூட்டமொன்றில் பேசி இருக்கிறார்

**குறும்பன்:-** எம் பி ஐயா! இந்தக் கதையை இங்கு விடாதீர்கள்! உங்களைப் போன்றவர்கள் எங்களுக்கு ஒன்றும் புதிதல்ல. உங்களைப் போல எங்களுக்கு உணர்ச்சி ஊசியடி த்து வாக்குச் சேகரிப்பவர்களை நீங்கள் பிறப்பதற்கு முன்னைய காலத்திலிருந்தே நாங்கள் பாத்திருக்கிறம். 1940 ல் “ தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா ! ” 1956ம் ஆண்டு தொடக்கம் 1970ம் ஆண்டு வரைக்கும் “உயிர் தமிழுக்கு உடல் தமிழ் மண்ணுக்கு ! ” “ தூக்கு மேடை பஞ்சு மெத்தை ! ” 1977ல் “ 21ந் திகதி எங்களுக்கு வாக்களித்தால் 22ம் தேதி தமிழீழம் மலரும் ! ” “பழம் பழுத்ததால் வெளவால் வரும்! ” என்றெல்லாம் அடுத்தடுத்த ஒவ்வொரு தேர்தலிலும் வெவ்வேற கதை விட்டு வாக்கு வேட்டையாடிய பென்னம் பெரிய அப்புக்காத்து அபேட்சகர்களையும் அடுக்கு மொழிப் பேச்சாளர்களையும் நாங்கள் கண்டு கேட்டு களைச்சுப் போயிருக்கிறம்.

உங்களவிட ஆனானப்பட்ட தமிழ் எம் பி ஐயாமாரை நாங்கள் பாத்தனாங்கள் ஐயா!. அவை ஒரு பொங்கலிலே சொன்னவை அடுத்த பொங்கலுக்குள்ள தமிழீழம் மலரும் எண்டு, ஒரு மே தினத்தில மேடையேறிச் சொன்னவை அடுத்த மேதினத் துக்குள்ள தமிழீழம் மலரும் எண்டு அதுக்காக எங்களை ஒண்டா நிண்டு தங்களுக்கு ஓட்டுப் போட்டால் சரியெண்டவை. அப்படி நாங்கள் எத்தனை பொங்கலையும் மே தினங்களையும் பாத்திட்டம். இப்ப நீங்கள் வந்து நிண்டு எங்களுக்குப் புதுக் கதை சொல்லிறியளோ!

நீங்கள் இருபத்திரண்டு பேர் எங்கட ஒருமித்த வாக்குகளால தானே பாராளுமன்றம் போனனீங்கள். என்ன செஞ்சனீங்கள் ஐயா! இப்ப சொல்லுற ஐயா நீங்கள் பத்து வருசமா பாராளுமன்றத்திலே இருக்கிறியள். ஒரு பத்து நாள் எங்கட வாழ்வுக்காக உண்ணாவிரதம் இருந்தியளா? ஒரு தடவையெண்டாலும் மறியல் போராட்டம் நடத்தி ஒரு நாள் தன்னும் சிறைக்குப் போயிருப்பியளா? அல்லது ஒரு தடவை யாவது உங்கட சொகுசு வாகனங்களை வித்து எங்களுக்காகச் செலவளித்திருப் பியளா? அப்ப என்னய்யா சொல்லிறியள் எங்களுக்காக நீங்கள் தியாகம் செய்த தெண்டு. எங்கட ஒண்டு பட்ட வாக்கால நீங்கள் மாடி வீடுகளாகக் கட்டியிருக்கிறியள்! உங்கட பொஞ்சாதி புள்ளையள் நல்ல வசதியா வெளிநாடுகளில பெரிய படிப்பு படிச்சு ஊரின்ற நுளம்பு தெரியாம நவீன வாழ்க்கை வாழுகினம். உங்களுக்கு எங்களால கிடைச்ச சொகுசுக் கார்களை அடுத்தடுத்து வித்த நீங்கள் கோடீஸ்வரர் களாகியிருக்கிறியள்! இனியும் ஏனய்யா எங்கள ஏமாத்திறியள்! நாங்கள் நல்ல இளிச்ச வாயங்கள் எண்டு கண்டிட்டியள்! அப்படித்தானே!

**செய்தி :-** அனர்த்த நிலைக்குப்பதிலாக அரசு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி சர்வாதிகார ஆட்சி நடத்தகிறது என்று பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கூறுகிறார். ஏதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் ஆளும் கட்சியைத் தோற்கடிப்பதன் மூலம் அரசுக்கு எதிரான மக்களின் எழுச்சி வெளிப்பட வேண்டும் என்கிறார் ரணில்.

அதிகாரங்களையும் சம உரிமைகளையும் பெற்றுக்கொள்ளும் வடக்கு மக்களின் ஜனநாயக போராட்டத்துக்கு ஐ.தே.க. தலைமை தாங்கும். யுத்தத்தின் பின்னர்நூறு வீதமான சுதந்திரமோ சமாதானமோ வடக்கு மக்களுக்கு கிட்டவில்லை என்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

**குறும்பன்:-** ஐயா ரணில் அவர்களே! இப்ப இருக்கிற ஆட்சியாளர்கள் அவசரகாலச்சட்டத்தை வைத்து சர்வ அதிகாரங்களும் கொண்டவையாக நடந்த கொள்ளுகினம் என்பது உண்மைதான். ஆனால் அதைப்பத்தி நீங்கள் காட்டிற கவலைதான் எங்களுக்கு ஆச்சரியமா இருக்குது. ஆடு நனையிதெண்டு ஓநாய் அழுததாம்! நீங்க ஆட்சிக்கு வந்தால் என்ன! உடனேயே நீங்கள் இந்த நாட்டில இனிமேல் அவசரகாலச் சட்டமே பிரகடனப்படுத்த முடியாத மாதிரி நிலைமையை உருவாக்கி விடுவீகளோ? உங்களால் உருவாக்கப்பட்டதுதானே இப்போதிருக்கும் அரசியல் யாப்பும் அதிலுள்ள அவசரகால அதிகாரங்களும். நீங்கள் ஆட்சிக்கு வந்தால் உங்களின் அரசாங்கம் மட்டும் அவசர காலச் சட்ட அதிகாரங்களை அரசியல் யாப்பில் இரு ந்து இல்லாமற் செய்துவிடுமா? அல்லது அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் கொண்டு வரப் போகிறீர்களா? சிலவேளை இப்போதிருக்கும் நிலைமையை விட மோசமான நிலையை நீங்கள் உருவாக்கக் கூடும் என்று மக்கள் சந்தேகிக்கிறார்கள். நீங்கள் ஆட்சி செய்த 17 ஆண்டுகள் எப்படி இருந்தன என்பதை இந்த நாட்டு மக்கள் இன்னமும் மறக்காதபடியால் தான் தொடர்ந்து பதினேழு தடவைகளாக உங்கள் கட்சியைத் தோற்கடித்தார்கள். இடையில் நீங்கள் பிரதமராகும் வாய்ப்பைத் தந்தார்கள். அப்போதும் நீங்கள் மக்கள் மத்தியில் விரக்தியையும் வெறுப்பையும் தானே விதைத்தீர்கள் இப்போதும் நீங்கள் உங்களது ஆட்சிவந்தால் அது உண்மையான மக்களாட்சியாகத்தான் இருக்கும் என்று மக்களை நம்ப வைக்கவில்லை. இப்போதிருக்கும் ஆட்சியை மாற்றுவதன் மூலம் மக்களுக்கு என்ன நன்மைகள் கிடைக்கும் என்பதை மக்கள் நம்பும் வகையில் உறுதியாக நீங்கள் முன்வைக்கவில்லை. ஜே. ஆர். ஜெயவர்த்தனா போல நீங்களும் ஒரு முறை அரசு கட்டில் ஏறி எதேச் சாதிகாரம் நடத்தும் ஆசைக்கனவில் தொடர்ந்தும் முயற்சி செய்யாதீர்கள். மக்கள் ஏற்கனவே விழிப்பாகத்தான் இருக்கிறார்கள் நீங்கள் முதலில் விழித்துக்கொள்ளப் பாருங்கள்.

இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு 13 வது திருத்தத்தின் பிரகாரம் ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்க ஐக்கிய தேசிய கட்சி தலைவர்கள் முன்வந்திருந்தால் இப்போது நீங்கள் இவ்வாறு பேசுவதற்கு சந்தர்ப்பம் இருந்திருக்காது என்பதை தமிழ் மக்கள் நன்கறிவர்.

# இரணைமடு குள அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி

கிளிநொச்சி இரணைமடுக்குளம் புனரமைப்புக்கென, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவி தமக்கு கிடைத்திருப்பதாக கிளிநொச்சி பிரதி நீர்பாசன பொறியியலாளர் என். சுதாகரன் தெரிவித்துள்ளார். இதன்படி குளக்கட்டின் புனரமைப்புக்கென 1100 மில்லியன் ரூபாவும், வாய்க்கால் உள்ளிட்ட புனரமைப்புக்காக 2200 மில்லியன் ரூபாவும் தற்போது தமக்கு கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். வாய்க்கால் உள்ளிட்ட திருத்தப் பணிகளுக்கு ஐ.எப்.ஏ.டி. அமைப்பு இந்த 2200 மில்லியன் ரூபாவையும் வழங்கியுள்ளதாகவும் மழை காரணமாக தாமதமடைந்திருந்த திருத்த வேலைகள் மீண்டும் தொடர இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதனைவிட இரணைமடுக்குளத்திலிருந்து திருவையாறு பகுதிக்கு நீர்ப்பாசனம் வழங்குவதற்காக இயந்திரங்களை திருத்தும் பணிகளும் நடைபெறவுள்ளதாகவும் இவ்வாறு இந்த ஏற்று நீர்ப்பாசனத்தின் மூலம் 1100 ஏக்கர் மேட்டு நிலப்பயிர்ச் செய்கையினை மேற்கொள்ள முடியும் எனவும் பெறியியலாளர் சுதாகரன் கூறியுள்ளார்.

இரணைமடு குளத்திலிருந்து யாழப்பாணத்திற்கு நீர்விநியோகம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் அதே சமயத்தில் இவ்வாறு நீர் விநியோகம் செய்யப்படுவதால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் குறித்தும் சர்ச்சைகள் உருவாகியுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

எவ்வாறாயினும், இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் விநியோகம் செய்யும் திட்டத்தின் முதல் கட்டமாக இரணைமடுக்குளம் புனரமைப்பு செய்யப்படுவது அவசியம் என்றும் அதனடிப்படையில் இந்த குளம் புனரமைக்கப்படவுள்ளதாகவும் பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் குறிப்பிட்டுள்ளார்.

## உள்ளுராட்சி தேர்தலில் போட்.. (1ம் பக்கத் தொடர்ச்சி)

பங்குபற்றலாம் என முடிவு செய்திருந்தோம். ஆனால், அதற்கான நிலைமைகள் ஏற்படவில்லை. இந்நிலையில் எமது கட்சியானது எதிர்வரும் தேர்தலில் எந்த வகையிலும் பங்கு பற்றுவது சாத்தியமுமில்ல, சரியானதுமல்ல என முடிவு செய்துள்ளோம். தேர்தல்களில் எமது கட்சி மீண்டும் எப்போது பங்குபற்றும் என்பதைத் தீர்மானிப்பதற்கு முதலில் எமது கட்சியை அதன் புரட்சிகர முற்போக்குக் குணாம்சங்களிலிருந்து பிசகாது இயங்கும் நிலையை உறுதிப் படுத்துவோம்! ஒரு புரட்சிகரக் கட்சிக்குரிய அடிப்படைகளில் முறைப்படுத்தப்பட்ட கட்சிக் கட்டமைப்பை பரந்துபட்டதாக கட்டியெழுப்புவோம்! பரந்துபட்ட பொதுமக்கள் மத்தியில் காத்திரமான தாக்கமுடைய சக்திகொண்ட கட்சியாக எமது கட்சியை வளர்ச்சியடையச் செய்வோம்! இந்த அரசியல் வேலைத்திட்டங்களையே எமது கட்சியின் அடுத்துவரும் கால கட்டத்துக்கான செயற்திட்டமாகக் கொண்டு செயற்படுவோம் என்பதை அனைவருக்கும் அறியத் தருகிறோம். எமது கட்சி எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது மேலும் மக்கள் மத்தியில் எந்தளவுக்கு மக்களை உண்மையில் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக வளர்ச்சியடைந்திருக்கிறோம். என்பதைப் பொறுத்து நாம் பின்னொரு தடவை மீண்டும் தேர்தலில் பங்குபற்றுவது பற்றி தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற முடிவோடு தேர்தல்களில் பங்குபற்றும் விவகாரங்களை நாம் பின்தள்ளிப் போட்டிருக்கிறோம்.

சமூகத் தலைமை என்பது வெறுமனே தேர்தல்களைப் பற்றி மாத்திரம் கருத்தில் கொண்டதாக அல்லாமல் பரந்துபட்ட மக்கள் சக்தியை தன்னகத்தே திரட்டிய உண்மையான மக்கள் தலைமையாகப் பரிணமிக்க வேண்டும். அரசியல் தலைமைத்துவம் ஒரு சமூக இயக்கமாகச் செயற்பட வேண்டும் எனக் கருதுகிறோம். மகாத்மா காந்தியடிகள், மகாசிந்தனையாளன் கார்ல் மார்க்ஸ், மாமேதை லெனின், தந்தை பெரியார் போன்றோர் மக்களின் சுதந்திரத்திற்கும் உண்மையான ஜனநாயகத்துக்கும் சமூக பொருளாதார விடுதலைக்குமான இயக்கத்தை நடத்தியது போன்ற சமூக ஜனநாயக சுதந்திர இயக்கம் ஒன்றை முன்னெடுக்க வேண்டிய தேவை இங்கே நிலவுவதை நாம் உணருகிறோம்.

யுத்தத்துக்குப் பிந்திய சூழ்நிலையில் தேசிய ஒடுக்குமுறைகள், சுரண்டல்கள், சமூகத் தீண்டாமைகள், பெண் அடிமைத்தனம் மனிதனால் ஏற்படுத்தப்படும் சூழலியல் மோசடிகள் கலாச்சார சீரழிவுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை கணக்கிலெடுத்துச் செயற்படவேண்டி உள்ளது.

1983ற்கு முந்திய எமது அரசியல் செயல்முறைகளையும், எமது சமகால தேசிய மற்றும் சர்வதேச அரசியல் பொருளாதார யதார்த்தங்களையும் கருத்திற்கெடுத்து செயற்பட வேண்டியிருக்கிறது. இராணுவமயப்பட்ட சூழ்நிலை, அன்றாடம் நிகழும் மக்களுக்கெதிரான வன்முறைகள், ஊழல்கள், சமூகச் சீர்குலைவுகள், திட்டமிட்ட குடியேற்ற மற்றும் கலாச்சார திணிப்பு முயற்சிகள், அரசியல் பொருளாதார ஆக்கிரமிப்புகள், சீரழியும் கல்வி முறைகள், நியாயங்களற்ற நீதிமுறைகள், என்றும் பயந்த வாழ்க்கை, அடிப்படைச் சுதந்திரங்களுக்கு உத்தரவாதமின்மை என இன்று நிலவும் பாரதூரமான பிரச்சினைகள் தொடர்பாக நாம் விழிப்புணர்வுடன் மக்களோடு இணைந்து செயற்பட வேண்டி இருக்கிறது.

இன சமூகங்களிடையே அரசியல் அதிகாரப் பகிர்வு, சமத்துவ சகோதரத்துவமான வாழ்வு, ஜனநாயக கலாச்சாரம் பற்றி காத்திரமான உணர்வை நாம் நாடளாவிய அளவில் ஏற்படுத்த வேண்டி இருக்கிறது. இயலுமானவரை தமிழ் மக்களினது சகல கட்சிகளுடனும் முஸ்லிம் மக்களது கட்சிகளுடனும் தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடனும் இணைந்து இந்தச் செயற்பாடுகளை நாம் முன்னெடுப்போம். தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று கூடும் அரங்கம் தொடர்ந்து செயற்பட வேண்டும். அது தேர்தல்களுக்கு அப்பாற்பட்டது தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும் சமகாலத்தில் மக்கள் அனுபவிக்கும் அன்றாடச் சவால்களையும் எதிர் நோக்குவதற்குமான கூட்டாகும். எனவே அது தேர்தல்களால் தடைப்படாது பார்த்துக் கொள்வது தமிழர்களிடையேயுள்ள கட்சிகள் அனைத்தினதும் கடமையாகும்.

1990களில் உலகளாவிய அளவில் நிலவிய சோசலிச மற்றும் முற்போக்கான தேசிய விடுதலை இயக்கங்களில் ஏற்பட்ட பின்னடைவுகளும், கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக இங்கு நிலைகொண்டிருந்த தமிழ்ப்பாசிசத்தின் விளைவுகளும், அத்துடன் பெளத்த சிங்கள மேலாதிக்க அகங்காரத்தின் சூழ்ச்சிகளும் இங்கே ஒரு விதமான கொள்கையுமற்ற பிழைப்புவாத அரசியற் சூழ்நிலை ஒன்றை இன்றைய சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளது. இங்கு ஒருபுறமும் பணமும் அதிகாரமமதையும், மறுபுறம் மக்களிடையே மற்ற இனங்கள் மற்றும் மதங்களுக்கு எதிரான உணர்ச்சிகளை ஊட்டும் அரசியல் வியாபாரமும் முக்கியமாகிப் போயுள்ளன. இந்தக்காலகட்டத்தில் நாம் நிதானமாக முன்னோக்கிக் கால்பதிக்க வேண்டியுள்ளது.

இவற்றையெல்லாம் மீறி நாம் சாமானிய மக்களைச் சார்ந்து நின்று தார்மீக நெறிமுறைகளை மீறாத சமூக அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். ஜனநாயக அரசியல் செயற்பாட்டில் தேர்தல்கள் முக்கியமானவை தான். ஆனால், அவைதான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறதென நாம் கருதக்கூடாது. எதிர்காலத்தில் மக்களுக்குப் பணியாற்றுவதற்கு தேர்தல்களினூடாக வரும் பதவிகளும் முக்கியம் என்று விரும்புவோமாயின் அதற்கு முதலில் எமது கட்சியையும் உறுப்பினர்களையும் எமது நெருங்கிய ஆதரவாளர்களையும் அவ்வாறான சேவைக்குரிய தரத்துக்கு நாம் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கான காலமும் சூழலும் தேவைப்படுகிறது. இங்கு நாம் ஒளித்து மறைத்து மக்களை ஏமாற்றி வழிநடத்தும் போலிப் பிரமை அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறோம். இதனாலேயே இத்தனை விடயங்களையும் இங்கு பகிரங்கமாக முன்வைக்கிறோம்.


இதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் மக்கள் நேர்மையானவர்களாகவும், நல்லவர்களாவும் வல்லவர்களாகவும் உள்ள மக்களின் உண்மையான சேவையாளர்களுக்கு தங்கள் ஜனநாயக உரிமையான வாக்குகளை சரியாக அளித்து தேர்வு செய்ய வேண்டும் என்றும் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறோம்.

# டெல்லி – கொழும்பு – யாழ்ப்பாணம்

டெல்லி மற்றும் கொழும்புக்கிடையேயான உறவு பாரம்பரியமான ஒன்றாக இருந்தாலும் 1983ல் இருந்து அது தீவிரமும், முரண்பாடுகளும் உடன்பாடுகளும் கொண்டதாக அமைந்தது.

இந்திய சுதந்திர இயக்கம் யாழ்ப்பாணத்தின் மீது எத்தகைய தாக்கம் செலுத்தியது என்பது பலருக்கும் தெரியவராத சங்கதி. யாழ்ப்பாண வாலிபர் சங்கத்தின் உதயம் காந்தியடிகளின் யாழ்ப்பாண விஜயம், காந்தியடிகள், ஜவகர்லால்







நேரு, சுபாஸ் சந்திரபோஸ், பகத்சிங் போன்றவர்களின் படங்கள் யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்தினரின் வீடுகளை பல தசாபதங்களாக அலங்கரித்திருந்தன. அணி சேராமை, பஞ்சசீலக் கொள்கை என்பனவெல்லாம் நாடுகளுக்கிடையிலான உறுவுகளுக்கிடையில் அதிலும் டெல்லியும் கொழும்பும் இணங்கிக் கொண்ட விடயங்களாக இருந்தன.

மலையகத் தழிழர்களின் வாக்குரிமை விடயத்தில் இலங்கைத் தலைவர்கள் காட்டிய தீவிரம் சுதந்திரத்துக்கு முன்னரே டெல்லித் தலைவர்கள் மத்தியில் நெருடலை ஏற்படுத்தத் தொடங்கியது. இந்திய இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அங்குராரப்பண மாநாட்டிற்கு 1930 களின் இறுதி வாக்கில் ஜவர்கலால் நேரு அவர்கள் வருகை தந்திருந்தார். மலையக மக்களின் பிரஜாவுரிமையைப் பறிப்பதில் சுதந்திர இலங்கை அரசாங்கம். மேற்கொண்ட அவசரம் டெல்லி கொழும்பு உறவில் கசப்பை ஆழ விதைத்தது. பின்னர் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம், இந்திரா சிறிமா ஒப்பந்தம் என்பவற்றால் மலையக தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டது போல் நாடற்றோர் என ஒரு பெருந்தொகையினரும் இங்கு உருவாக்கப்பட்டமை ஒரு துயரமான வரலாறு.

இலங்கையின் பூர்வீக குடிகள் பற்றிய கருத்துக்களில் தமிழர்கள் வந்தேறு குடிகள், கள்ளத் தோணிகள் என பாமரத்தனமாக சிங்கள இன வாதிகளால் பழித்துரைக்கப்பட்டனர். இலங்கையர் நாம் எல்லோருமே இந்தியாவோடு மிக நெருங்கிய உறவுகளோடு இருந்து வந்தவர்கள் என்ற அறிவுபூர்வமான வரலாற்றுப் பார்வை இங்கு உரிய இடம்பெறவில்லை.

தென்னிந்தியர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் எனக் கதைகள் கூறும் ஓவியங்கள் இலங்கையின் விகாரைகளில் சுவரோவியங்களாக நிறைத்திருக்கின்றன. எல்லாளன் துட்டகைமுனு சண்டையை தமிழ் சிங்கள இனங்களுக்கிடையிலான யுத்தமாக இனவாதிகள் திரிபுபடுத்தியிருப்பது 20ம் நூற்றாண்டின் வரலாற்றுத் துரதிஸ்டம்.

தமிழர்களை கள்ளத் தோணிகள், வந்தேறு குடிகள் என்று சொல்பவர்கள் சிங்கத்திற்கும் ஒரு பெண்ணிற்கும் பிறந்த ஒரு பரம்பரையே சிங்களவர் என்ற கற்பிதக் கதையிலும் இந்தப் பரம்பரையின் உதயம் கிழக்கிந்தியாவின் லாலா நாட்டிலிருந்தே தொடங்குகிறது என்று விளக்கும் சிங்களப் புராணக் கதைகளையே நம்பியிருக்கின்றனர்.

1950 ற்குப் பின்னர் இலங்கையின் இன சமத்துவத்துக்காக எழுந்த சமஷ்டிக் கோரிக்கையிலும் சீர்திருத்தக் கோரிக்கைகளிலும் காந்தீயம், பெரியாரிசம், திராவிட முன்னேற்றக் கழக அரசியல் மற்றும் தமிழக சினிமாக்களின் தாக்கம் வெகுவாகவே பரவி இருந்தன ஆனால், இவற்றின் செழுமைமிகு கூறுகள் முழுமையாய் பயன்படுத்தப்பட்டனவா என்பது கேள்விக்குறியே. அதேவேளை தொழிலாளி வர்க்க சர்வதேசிய எண்ணப்பாடுகளுடன் இந்திய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையே நிலவிய வலுவான உறவுகளும் கவனத்துக்குரியனவாகும்.

ஆனால், 1983 ற்கு பிந்திய சூழலோ மிகவும் வித்தியாசமானது. மிகவும் இறுக்கமானது 1990 வரை உலகம் இரண்டு முகாம்களாக இருந்து கொண்டு இருந்தது. சோவியத் முகாம் அமெரிக்க முகாம் ஆகியவற்றிக்கிடையில் நேரடி சண்டைகளற்றதோர் கெடுபிடி யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலம் அது. மூன்றாம் உலக நாடுகள் பல அணி சேராமை என்ற கோட்பாட்டின் கீழ் அணிதிரண்டன. ஆனால் இந்த அணிசேரா நாடுகளிற் பெரும்பான்மையானவை சோவியத் யூனியன் தொடர்பாக நல்லெண்ணத்தையே கொண்டிருந்தன.

இத்தகைய காலகட்டத்தில் தான் இலங்கையில் 1977ல் ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு திறந்த பொருளாதார கொள்கைகளை இலங்கையில் அறிமுகப்படுத்தியது. தீவிர அமெரிக்க, மேற்கத்திய சார்பை எடுத்தது. இலங்கையில் அமெரிக்க ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்ற பெயரில் சிலாபத்தில் வேலைகள் ஆரம்பித்தன. ஒரு தசாப்தத்துக்கும் மேலான காலத்தின் பின்னர் இஸ்ரவேலுடனான ராஜதந்திர உறவுகள் புதுப்பிக்கப்பட்டன.

ஆனால் 1977, 1981, 1983 என தமிழ் மக்களுக்கு எதிரான மூன்று திட்டமிட்ட கலவரங்கள் நடத்தப்பட்டன. இலங்கைத் தமிழ் மக்களுடன் பாரம்பரிய சொந்த இன மற்றும் கலாச்சார உறவுகளைக் கொண்ட தமிழகத்தில் கொந்தளிப்பான நிலை உருவானது. மேலும் கொழும்பு கடைப்பிடித்து வந்த சர்வதேச -பொருளாதார அரசியல் கொள்கைகளும், தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளும் புதுடில்லியில் மகிழ்ச்சியற்ற நிலையை -அதிருப்தியை வெளிப்படையாகவே அதிகரித்தது.



1983 இனக்கலவரத்தை நியாயப்படுத்தும் விதமாக ஜனாதிபதி ஜே.ஆர் அது சிங்களவர்களின் தேசிய எழுச்சி என்று கூறியபோது பாரதப் பிரதமர் இந்திராவின் எதிர்வினை வேறுவிதமாக இருந்தது. தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை இந்தியா தொடர்ந்து சகித்துக்கொண்டிராது என்றவாறாக அமைந்திருந்தது. 1980 களின் முற்பகுதியில் கொழும்பு டெல்லி உறவுகளில் முரணான இறுக்கங்கள் வெளிப்பட ஆரம்பித்தன. இந்திரா - சிறிமா காலத்திலிருந்து இந்திரா - ஜே ஆர் காலம் மிகவும் முரண்பட்டதாக அமைந்தது.

பல ஆயிரக்கணக்கானவர்கள் புலம்பெயர்ந்து தமிழகம் சென்றார்கள் ஆயுதம் ஏந்திய இயக்கங்களின் விரிவாக்கம் தமிழ்ச் சமூகத்திற்குள் விரைவுபட்டது. இந்தியா அக்கால கட்டத்தில் அந்த இயக்கங்களின் இருப்பிற்காகன தார்மீக நியாயங்களை ஏற்றுக்கொண்டதுடன் தாராளமாக உதவிகளையும் செய்தது. தமிழ் அரசியல் இயக்கங்களின் தலைவர்கள் அங்கத்தவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்தார்கள் -முகாம்கள் அமைத்தார்கள்- பயிற்சிகளை மேற்கொண்டார்கள். தமிழகத்துக்கு வெளியிலும் வட இந்தியாவிலும் கூட பயிற்சிகள் நிகழ்ந்தன. தமிழ் தலைவர்களுக்கு அடிக்கடி தமிழக தலைவர்களுடன் மட்டுமல்ல டெல்லியுடனும் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பங்களும் கிடைத்தன.

யாழ்ப்பாண புத்திஜீவிகள் மற்றும் அரசியல் சமூகத் தலைவர்கள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களை அன்னை இந்திரா என்றே அழைத்தார்கள்.

1983 ம் ஆண்டு இனக்கலவரத்துக்குப் பிந்திய சூழ்நிலைகளில் கொழும்பிற்கும் டெல்லிக்கும் இடையில் உறவுகள் மோசமடைந்து கொண்டே இருந்ததெனினும் இந்தியாவின் மிகச்சிறந்த ராஜதந்திரி என அழைக்கப்பட்ட ஜி. பார்த்தசாரதி இலங்கைக்கு வந்து சென்றுகொண்டிருந்தார் ஒரு சுமூகமான அரசியற் தீர்வை சிங்கள தமிழ் அரசியற் தலைவர்கள் இணைந்து எட்டுவதற்கான முயற்சிகளை அவர் மேற்கொண்டார். மாவட்ட சபைகளுக்கு அப்பால் அதிகாரப் பகிர்வுக்குத் தயாராக இல்லாமல் இருந்த ஜே ஆரை மாகாண மட்டத்தில் அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு சம்மதிக்க வைத்தார்.

1983ம் ஆண்டில் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆறாம் திருத்தத்தால் பிரிவினைக் கோரிக்கையை முன்வைப்பவர்கள் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்க முடியாது என்ற நிலை ஏற்பட்ட பின் இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிப்பதற்கு சாத்தியமும் இல்லாமல் போனது. பெரும்பாலான தமிழ்த் தலைவர்கள் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். அமிர்தலிங்கம் சிவசிதம்பரம் போன்ற தலைவர்கள் சிறப்பு அரச விருந்தினர்களாக தமிழக அரசின் விருந்தினர் விடுதிகளில் இடமளிக்கப்பட்டார்கள்.

பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சனைகளை உலகத்திற்கு எடுத்துரைப்பதற்கான வசதிகளை அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களுக்கு வழங்கினார். உமா மகேஸ்வரன் மற்றும் தோழர் பத்மநாபா போன்ற இளம் தமிழ்த் தலைவர்களையும் அவர் சந்தித்து உரையாடினார்.

1985ல் பூட்டானின் தலைநகர் திம்புவில் தமிழர் கூட்டணித் தலைவர்கள் மற்றும் ஆயுதந் தாங்கிய தமிழ் அரசியல் இயக்கங்களின் தலைவர்களும் ஒருங்கிணைந்த வகையாக இலங்கை அரசின் ராஜதந்திரப் பிரதிநிதிகளுடன் சந்தித்துப் பேசுவதற்குரிய ஏற்பாட்டை இந்தியா ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

ஈழ - தமிழீழ நம்பிக்கையைக் ஆழமாகக் கொண்டிருந்த கட்சிகள் - இயக்கங்கள் ஒரு சமரசமான உடன்பாட்டை எய்த முயற்சிப்பதற்கு மாறாக

1. இலங்கையில் தமிழர்கள் ஒரு தேசிய இனம்.
2. இலங்கையில் தமழர்களுக்கென ஒரு பாரம்பரிய தாயகப் பிரதேசம் உண்டு.
3. இலங்கை வாழ் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு.
4 இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் வாக்குரிமை உட்பட முழுமையான குடியுரிமை வழங்கப்பட வேண்டும்.

திம்புவில் பேச்சுவார்த்தை நடக்கும் போது யாழ்ப்பாணத்தில் அதற்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. பேச்சுவார்த்தை நிகழ்வுகளில் ஒரு விதமான நாடகத்தன்மையே காணப்பட்டது.

வரலாற்றின் வினோதம் என்னவென்றால் 1930 களில் இளம் ஜே.ஆர் இலங்கை சமசமாஜக் கட்சியின் அங்கத்தவர். பின்னர் அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார். 1940 களின் ஆரம்பத்தில் இலங்கை இந்தியாவின் ஒரு மாநிலமாக அமைந்து பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற வேண்டும் என்று கருத்துரைத்தவர். பின்னர் சிங்களம் மாத்திரம் இலங்கையின் அரச கரும மொழி ஆக வேண்டும் என்று அவாவுற்றார். பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டி யாத்திரை சென்றார்.

1983ன் இன வன்முறையை எதிர்த்து இலங்கைத் தமிழர்கள் மீது இந்தியா கரிசனை காட்டிய போது வட இந்தியர்களும் சிங்களவர்களும் ஆரியர்கள், உயிரியல் ரீதியாக ஒரே மாதிரியானவர்கள் என்று சொல்ல முற்பட்டார். இந்திரா காந்தி அவர்களின் மூக்கும் சிங்களவர்களின் மூக்கும் ஒரே மாதிரியானவை என்று பாராளுமன்றத்தில் நகைச்சுவையாய் கூறினார். பின் ஒரு சந்தர்ப்பத்தில் தனது அரசியல் அனுபவம் ராஜீவ் காந்தி அவர்களின் வயதை விட கூடியது என பிரஸ்தாபித்திருந்தார். மனதளவில் அவர் எத்தகைய குழப்பங்களுக்கு உள்ளாகியிருந்தார் என்பதையே இவை காட்டுகிறது.

1978 ல் ஜே.ஆரால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அரசியல் யாப்பு ஜனாதிபதியிடம் குவிந்த அளவுக்கு மீறிய அதிகாரம், ஜேஆரின் வார்த்தையில் ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர மிகுதி எல்லாவற்றையும் செய்யக்கூடிய எல்லையற்ற அதிகாரம் சர்வாதிகார அகங்காரத்தை அவருக்குத் தோற்றுவித்தது. அவரது அடக்குமுறைக்குள் தொழிற்சங்கங்களும் இடதுசாரிகளும் எதிர்க் கட்சிகளும் தமிழர்களும் அடக்கப்பட்டார்கள் ஆனால், இப்படியே போனால் எங்கே செல்லும் இந்தப் பாதை யாரோ யாரறிவார் என்ற உள்ளுணர்வு ஜே.ஆரின் உள்ளத்தில் ஒரு மூலையில் எப்போதும் இருந்ததையும் காணலாம். வீர வசனங்கள், தந்திர நையாண்டிகளுக்கு அப்பால் பக்கத்து நாடு பற்றிய பீதி ஜே.ஆரிடம் உள்ளூர இருந்துகொண்டேதான் இருந்தது.

வடமராட்சி "ஒப்பரேசன் லிபரேசன்" ஆரம்பித்த போது இந்தியாவின் ராஜதந்திர செயற்பாடுகள் அதனை தடுத்து நிறுத்தியதோடு மிராஜ் 2000 விமானங்கள் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொட்டலங்கள் வீசுவதற்கும் இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படுவதற்கும் ஜே.ஆர் ஒத்துழைக்க வேண்டியிருந்தது. அது அவருக்கு துயரமான அனுபவமாக இருந்தாலும் இந்தியாவையும் தமிழர்களையும் முரண்பட வைப்பதற்கான வாய்ப்பாகவும் அதனை பாவிக்க அவர் முயற்சித்தார்.

ஜே.ஆரின் சதி ஒளியில் விழும் விட்டில் பூச்சிகளாகவே தமிழர்களின் அரசியல் ஆயுத இயக்கங்களின் பெரும்பான்மையானவற்றின் செயற்பாடுகள் இருந்தன. 1986ன் முற்பகுதியில் இருந்து சக இயக்கங்களை புலிகள் அழித்துக்கொண்டு இருந்ததால் - சகோதரப்படுகொலைகள் நிகழ்ந்து கொண்டு இருந்ததால் ஜே.ஆர் தனது அவதந்திர கணக்கிற்கு அதனையும் பயன்படுத்த முயற்சித்தார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மீதான - அதன் இலக்கான அதிகாரப் பகிர்வின் செயன்முறையை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு சகலவிதமான அனுசரணைகளை - ஒத்துழைப்புக்களை வழங்க இந்தியா தயாராக இருந்த போது ஜே.ஆரின் தகிடு தத்தங்கள் அபாரமானவை.

பார்த்தசாரதி - அமிர்தலிங்கம் போன்றவர்களின் பங்களிப்புடன் சிங்களவர்களும் ஒத்துக்கொள்ளக்கூடியது எனக்கருதி சில ஆண்டுகளாக அதிகாரப் பகிர்வுக்கான வடிவமைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இந்திய முறைமையை ஒத்த அதிகாரப் பகிர்வு முறை இலங்கைக்குப் பரிந்துரைக்கப்பட்டது.

ஜே.ஆரின் சுத்துமாத்து, சித்து விளையாட்டுகள் ஒருபுறம், இலங்கையை இந்தியாவிற்கு தாரை வார்த்தாயிற்று என்ற பிரதான எதிர்க்கட்சியின் கூச்சல், ஜே.வி.பியின் ஜனநாயக விரோதப் பாதையும் இந்திய விரோத உள்ளடக்கத்தைக்





சுதுமலை கூட்டத்தில் பிரபாகரன், கிட்டு

கொண்ட கிளர்ச்சி என்பன சிங்கள அரசியலின் சாராம்சமாக இருந்தன.

கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி இவற்றின் குரலே தார்மீகமானதாக இருந்தது. இவை அதிகாரப் பகிர்வை ஆதரித்தன. இன சமூகங்களிடையே நல்லுறவை வலியுறுத்தினர். ஆனால் அவர்களுக்கு இது மிகுந்த ஆபத்தான சங்கதியாக அமைந்திருந்தது என்பதும் உண்மை.

ஈ.பி.ஆர்.எல்.எவ். உள்ளிட்ட கட்சிகளின் உதவியுடன் அதிகாரப் பகிர்வினை மேற்கொள்ள

# இடையே உறவின் ஓட்டம் ஒரு பார்வை

வேண்டிய நிலமைக்கு இந்தியா தள்ளப்பட்டது.. இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடும் போது இயக்கங்களிடம் இருந்து ஆயுதங்களைப் பெற்றாக வேண்டும் என்ற கோரிக்கை ஜே.ஆரிடமிருந்து வந்தது. ஆனால், விடுதலைப் புலிகளிடம் இருந்து அதனைப் பெற முடியவில்லை. இலங்கைப் படையினரிடம் பிடிபட்ட குமரப்பா, புலேந்திரன் உட்பட்ட புலிகளின் முக்கியஸ்தர்கள் சயனைட் உட்கொண்டு மரணிக்க நிர்ப்பந்திக்கப்பட்டதிலிருந்து. திலிபன் உண்ணாவிரதம் இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டதிலிருந்து புலிகளின் நடவடிக்கைகள் இந்தியா மீதான சீற்றமாகவே இருந்தன.

அவர்கள் இந்திய அமைதிகாப்புப் படையினருக்கு எதிரான சண்டையை ஆரம்பித்தார்கள். கொழும்பு எதில் மகிழ்ச்சி அடையுமோ கொழும்பு எதை விரும்பியதோ அதை அவர்கள் மேற்கொண்டார்கள்.

1987ற்கு முன்னர் இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற இந்தியப் படைகள் அனுப்பப்பட வேண்டும் என்பது புலிகளை ஆதரித்து நின்ற தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளினதும் கோரிக்கையாகவும் இருந்தது. ஆனால் அதே இந்தியாவின் படைகளுடன் புலிகள் சண்டையிட்டார்கள்.

இந்திய இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்பட்ட போதே நாடக பாணியில் முணுமுணுத்த பிரேமதாசா தனத கட்டம் வந்தபோது பிரபாகரனுடன் பாசாங்கான அண்ணன் தம்பி உறவை கொண்டாடினார். ஆயுதங்களையும் பணத்தையும் பரிசாக வன்னிக்காட்டுக்கு அனுப்பினார். ஜே.வி.பியை முழுமையாக களையெடுப்பதற்கும் பின்னொரு காலத்தில் புலிகளுக்கு ஆப்பு வைப்பதற்கும் அப்போது இந்தியப் படைகள் வெளியேற வேண்டும் என்பதற்கும் வடக்கு கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட வேண்டும் என்பதில் தமது



ஆயுதங்களை ஒப்படைத்து இற்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்பதாக சுதுமலையில் 04.08.87 அன்று புலிகளின் தலைவர் பிரபாகரன் அறிவித்த கூட்டத்தில் அமைதிப்படை உயர் அதிகாரிகள் உபசரிக்கப்படும் காட்சி

விருப்பத்தையும் புலிகளின் விருப்பத்தையும் உடன்படுத்தினார்

மாகாணசபைக்கு அதிகாரங்கள் கோரப்பட்டதால் அவர் மிகவும் சினப்பட்டிருந்தார். மறுபுறம் ஜேவிபி யுஎன்பியினரை காவு எடுத்துக் கொண்டிருந்தது. இந்நிலையில் ஆபத்பாந்தவனாக புலிகள் கைகொடுத்தனர் மாகாண சபையும் வேண்டாம் இந்தியப் படையும் வேண்டாம் என்ற நிலைக்கு தமிழர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். இந்திய அமைதிகாப்புப்படை 32 மாதங்களில் 1500க்கும் மேற்பட்ட தனது வீரர்களை இழந்திருந்தது. இந்தியா இலங்கை விடயத்தில் ஏன் தலையிட்டது என இந்தியர்களே குழம்பும் அளவுக்கு நிலைமைகள் மாறின.

பாகிஸ்தான் - வங்கதேச யுத்தங்களின் பின்னர் வீரர்களாக வரவேற்கப்பட்ட இந்தியப் படையினர் இலங்கையிலிருந்து திரும்பிய போது தமிழகத்தில் வரவேற்கப்படவில்லை பிரேமதாசாவும் புலிகளும் அமைதிப் படையை வெளியேறுமாறு கூறினார்கள். இந்தியாவில் ஆட்சி மாற்றம் நடந்துகொண்டிருந்தது. தமிழகத்தின் முதல்வர் கலைஞரும் இந்திய அமைதிகாப்புப் படையை இந்திய மக்கள் கொல்லும் படை என வர்ணித்து அவமானப் படுத்தினார். இந்தியாதவுக்கு உதவியதற்காக ஈ.பி.ஆர்.எல்.எவ் தோழர்கள் தமிழகத்தில் காலடி எடுத்து வைப்பதைக் கூட அவர் அனுமதிக்கவில்லை.

இங்கு சிங்களப் பேரினவாதம் பிரேமதாச அரசு ராஜதந்திர ரீதியில் வெற்றிபெற்றதாகப் பெருமை கொண்டது. உண்மையும் அதுவாகத்தான் இருந்தது. இந்தியா தமிழர்களுக்கு வாக்குறுதி அளித்தபடி இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப படையிலான மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பகிர்வு செய்வதை உறுதி செய்யவில்லை. உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணசபையும் கலைக்கப்பட்டது. இதனையே தமிழர்களின் ஒரு பகுதியினரும் அன்று விரும்பினர். என்ன நடைபெறுகிறது என்பதை அறியாமல் புலிகளின் மாயைக்குள் அமிழ்ந்து அதனை ஆதரித்தனர்.

இந்தக் காலகட்டம் டெல்லி கொழும்பு யாழ்ப்பாண உறவுகளின் மிக மோசமான காலகட்டம். டெல்லி மற்றும் கொழும்புக்கு இடையேயான உறவு மட்டுமல்ல, யாழ்ப்பாண மனோநிலையிலும் இந்திய விரோத நிலைப்பாடே வலுவாக அன்று நிலவியது தமிழர்களின் அரசியல் விருப்பங்களெல்லாம் புலிகளின் செல்வாக்கு மண்டலத்துக்கு உட்பட்டவையாகவே இருந்தன.

*(1990 க்குப் பிந்திய வளர்ச்சி அடுத்த இதழில்)*

---

**யாழ் அரச அதிபரையும் யாழ். இராணுவ கட்டளைத் தளபதியையும் மீனவர்கள் சந்திப்பு**

## கடலில் தமக்கு பாதுகாப்பளிக்குமாறு கோரிக்கை

யாழ் அரச அதிபர் திருமதி இமல்டா சுகுமார் அவர்களை 19.02.2011 அன்று சந்தித்த வடமராட்சி மீனவர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் மற்றும் பிரதிநிதிகளும், மாதகல் மீனவர் சங்கங்களின் சமாஜத் தலைவர் மற்றும் பிரதிநிதிகளும் வடமாராட்சி கிழக்கு மற்றும் மாதகல் கடற் பரப்புகளில் இந்திய மீனவர்களால் தாங்கள் பழிவாங்கப்படலாம் என அஞ்சுவதால் சிங்கவிடமும் மீனவசங்கப் பிரதிநிதிகள் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறி தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரினர்.

மீன்வளங்களை சூறையாடுவதாகத் தெரிவித்தும் வலைகளைச் சேதப்படுத்திச் செல்வதனை காரணம் காட்டியும் வடமராட்சி, வடமராட்சி கிழக்கு, மற்றும் மாதகல் கடற்பிரதேசத்தில் இந்திய மீனவர்கள் 136 பேர் சிறைப் பிடிக்கப்பட்டனர்.




உள்ளூர் மீனவர்களின் பாதுகாப்பை பலப்படுத்தி உதவுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

இந்தச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட மீனவர் சங்க பிரதிநிதிகள் இந்தக் கடற்பரப்புகளில் அண்மைய தினங்களாக பதட்ட நிலை தொடர்வதாகவும் இதனால் உள்ளூர் மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதைத் தவிர்த்து வருவதாகவும் தெரிவித்தனர்.

இச் சந்திப்பிற்கு அழைக்கப்பட்ட யாழ்மாவட்ட ராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துரு இவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட போதும், சடுதியாக விடுதலை செய்யப்பட்டு பாதுகாப்பாக தமது நாட்டுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்திய மீனவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டதை தொடர்ந்து 21 இலங்கை மீனவர்களும் இந்திய கடற்பரப்பில் வைத்து சிறைப்பிடிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். இவர்களை காங்கேசன்துறையிலிரந்து 15 கடல்மைல் தொலைவில் வைத்து தாம் பொறுப்பேற்றுக்கொண்டதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.




## யாழ்நகர் கஸ்தூரியார் வீதியில் 5 மாடி சந்தைக் கட்டிடம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஐந்து மாடிக் கட்டிடத்தின் மூலம் நகரின் வர்த்தக நடவடிக்கைகளும் அபிவிருத்தியும் முன்நோக்கி நகரும் என யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கூறினார். யாழ். நகரில் கஸ்தூரியார் வீதியில் உள்ள மாநகர சபையின் காணியில் புதிய ஐந்து மாடி சந்தைக் கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல்லை இம்மாதம் 10.02.2011 அன்று நாட்டிவைத்து உரையாற்றும் போதே முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா இவ்வாறு தெரிவித்தார்.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டபடி நகரின் அபிவிருத்தியிலும் அழகிலும் நாங்கள் அக்கறையுடன் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றோம் எனவும் குறிப்பிட்டார்

எதிர்காலத்தில் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களை மாநகர சபை முன்னெடுக்கவுள்ளது. இந்த சந்தைக் கட்டிடம் விரைவில் பூர்த்தி செய்யப்பட்டு நகரின் பொருளாதார வளத்தையும் வர்த்தக செயற்பாடுகளையும் மேம்படுத்த எல்லோரும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம் என்றார்.

மாநகர சபை ஆணையாளர் மு. செ. சரவணபவ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வினை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். இவ் வைபவத்தில் உரையாற்றிய அவர் கடந்த 30 ஆண்டுகளாகப் பின்நோக்கி



இருந்த நிலைமைகள் மாறி இன்று பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுவதால் குடாநாடு ஒரு புதிய சூழலை எதிர் கொண்டு வருகின்றது. இங்குள்ள 6 இலட்சத்து 15 ஆயிரம் மக்களுடன் இடம்பெயர்ந்து இபபோது மீளக் குடியமர்ந்துவரும் மக்களின் வருகையுடன் யாழ் மாவட்டத்தில் குடியிருப்பாளர்களின் தொகை 7 1/2 இலட்சமாகியுள்ளது. இம் மக்கள் அனைவரும் இங்கு பொருளாதார வளர்ச்சியுடன் வாழ இந்த வர்த்தக நிலையம் கைகொடுக்கும்.

இப்பொழுது ஒரு பாரிய சந்தைக் கட்டிடத்தை அமைப்பதன் மூலம் நகரின் அபிவிருத்திக்கு மாநகரசபை பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது..

இதன் வளர்ச்சியும் அபிவிருத்தியும் பல்வேறு செயற்பாடுகளினூடாக முன்னெடுக்கப்பட்டு நகரம் வளம்பெறும் என நம்பிக்கை பிறக்கின்றது என அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

## காவல் துறை அதிகாரங்கள் அவசியம்

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு காவல்துறை அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

13ம் திருத்தச் சட்டத்திற்கு அமைவாக அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என அவர் குறிப பிட்டுள்ளார்.

மாகாண காவல்துறை அலகொன்றை அமைப்பதற்கு சட்டத்தில் இடமிருந்த போதிலும் அரசாங்கம் அதனை உருவாக்கத் தவறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாகாண சபைகளுக்கு காவல்துறை அதிகாரம் அவசியமில்லை என பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரன் தெரிவித்துள்ள போதிலும் அதனை ஓர் தனிப்பட்ட நபரின் கருத்தாகவே கருதப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ள அவர் ஒட்டு மொத்த தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

காவல்துறை மா அதிபரே நாட்டின் காவல்துறைக்கு தலைவராக திகழுவார் எனவே, மாகாண காவல்துறை அலகுகளை உருவாக்குவதில் சிக்கல் ஏற்படாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பெண்கள் உரிமைகளை காப்பதற்கான நிறுவனங்கள் அவசியம்

பெண்கள் சுயமாக தொழில் பார்க்க நிதி வழங்கும் நிறுவனங்கள் ஆதரவு வழங்க வேண்டும். பெண்கள் கடன் வசதிகளை பெற்றுக் கொள்வதில் பல இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் பெருகிவரும் வங்கிகள், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கடன் வசதிகளை இலகுவாக்குபவையாக காணப்படவில்லை. கிராமியப் பெண்களுக்கு உற்பத்திக் கடன் வழங்கும் நடைமுறை விருத்தியாக்கப்படவில்லை. பெண்கள் நிர்வகிக்கும் கிராமிய வங்கிகள் உருவாக்குவதன் மூலம் இக்கடன் வழிமுறைகளை இலகுவாக்க முடியும். மேலும் பெண்கள் தம்மை ஒழுங்கமைப்புக்குள் உட்படுத்தி தம் உரிமைகளை காப்பதற்கான நிறுவனங்களை உருவாக்குதல் இன்றியமையாதது. இவை இன்னும் எட்டப்படவில்லை.

சிந்தனைக்கூடம் - யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட வளங்கள், பயன்பாடு, அபிவிருத்தி வழிமுறைகள்" எனும் தலைப்பில் நடத்திய இருநாள் செயலமர்வில் 05.02.2011 அன்று மாலை இடம்பெற்ற இரண்டாவது அமர்வில கலந்துகொண்டு உரையாற்றிய திருமதி சரோஜா சிவசந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# நினைவு கூருகின்றோம்

### தோழர் அமீன்
**சோமு ஜெகநாதன்**
**மட்டுவில், சாவகச்சேரி**

ஈபிஆர்எல்எவ் இன் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படையின் செயற்பாட்டாளரான தோழர் அமீன் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பயிற்சிப் பாசறையில் பயிற்சி பெற்றவர். யாழ்ப்பாணம் கோட்டை இராணு வமுகாம் சூழலில் பாதுகாப்புப் பணிக்கென சென்றிருந்த வேளையில் புலிகளால் வஞ்சகத்தனமாக படுகொலை செய்யப்பட்டார்.





செயலாளர் நாயகம் அமரர் தோழர் பத்மநாபா தோழர் அமீனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியபோது

தமிழ் பேசும் மக்களின் விடிவுக்கான போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து
பெப்ரவரி மாதத்தில் உயிர் நீத்த தோழர்கள் ஆதரவாளர்கள் இவர்கள்.
அவர்களின் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்களது பணியை
நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு
இத் தோழர்களுக்கு எமது அஞ்சலியை செலுத்துவோம்

| பெயர் | கட்சியில் | வசிப்பிடம் | இறந்த திகதி | காரணம் |
|---|---|---|---|---|
| இ.பாக்கியராசா | பாப்பா | 4ம் குறிச்சி, ஏறாவூர் | 28.02.1987 | |
| கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு | அல்பேட் | சித்தானைக்குட்டிபுரம், காரைதீவு | 28.02.1987 | |
| எஸ்.புத்திசிகாமணி | முரளி | ஏறாவூர் | 03.02.1985 | எஸ்ரிஎவ் |
| எம்.சிறீதரன் | சிறி | வந்தாறுமூலை | 03.02.1985 | எஸ்ரிஎவ் |
| எல்.அருள்தாஸ் | அருள் | ஆறுமுகத்தான் குடியிருப்பு | 03.02.1985 | எஸ்ரிஎவ் |
| எஸ்.அரசரட்ணம் | உதயன் | ஆறுமுகத்தான் குடியிருப்பு | 03.02.1985 | எஸ்ரிஎவ் |
| | ரவி | மண்டூர், மட்டக்களப்பு | 20.02.1986 | எஸ்ரிஎவ் |
| | ராஜன் | மண்டூர், மட்டக்களப்பு | 02.02.1986 | எஸ்ரிஎவ் |
| கே.யோகராஜான் | ராஜா | ஏறாவூர் - 04 | 28.02.1986 | எஸ்ரிஎவ் |
| கே.மகேசன் | சண் | கிரான் | 28.02.1986 | எஸ்ரிஎவ் |
| பி.யோகேந்திரன் | யோகா | பேத்தாளை | 12.02.1986 | எஸ்ரிஎவ் |
| வை.தெய்வசீலன் | செழியன் | களுவாஞ்சிக்குடி | 28.02.1986 | புலிகள் |
| கே.சகாயநாதன் | | ஏறாவூர் | 12.02.1986 | எஸ்ரிஎவ் |
| என்.நாகேஸ்வரன் | யோகா | வாழைச்சேனை | 26.02.1986 | எஸ்ரிஎவ் |
| | இந்திரன் | சேனைக்குடியிருப்பு | 16.02.1987 | புலிகள் |
| | ரஜனி | 40 ஆம் கொலணி மண்டூர் | 04.02.1987 | புலிகள் |
| | குட்டி | உன்னிச்சை | 00.02.1987 | புலிகள் |
| என்.குமார் | கண்ணன் | கிரான் | 18.02.1987 | புலிகள் |
| எம்.குணரட்ணம் | ரெட்டு | புதுக்குடியிருப்பு | 12.02.1987 | புலிகள் |
| என்.ஆனந்தன் | சாந்தன் | தம்பிலுவில் - 02 | 03.02.1987 | புலிகள் |
| | ரவி | மண்டூர்,மட்டக்களப்பு | 20.02.1986 | எஸ்ரிஎவ் |
| பாலா | | சித்தாண்டி, மட்டக்களப்பு | 12.02.1989 | |
| நித்தி | | அக்கரைப்பற்று, அம்பாறை | 12.02.1989 | |
| நவீனன் | | மட்டக்களப்பு | 12.02.1989 | |
| நல்லதம்பி | மணி | வாழைச்சேனை | 13.02.1986 | எஸ்ரிஎவ் |
| தாஸ் | | திருகோணமலை | 12.02.1989 | |
| கமலநாதன் | ரமேஸ் | மூதூர் | 08.02.1988 | புலிகள் |
| இந்திரன் | குமார் | 4ம் கட்டை, வவுனியா | 12.02.1989 | |
| சோமு ஜெகநாதன் | அமீன் | சாவகச்சேரி | 20.02.1986 | புலிகள் |
| மரியநாயகம் மேகன் மரியசீலன் | சதீஸ் | இத்தாவில், சதாபுரம், பளை | 28.02.1989 | புலிகள் |
| சின்னத்தம்பி ரவிச்சந்திரன் | ரவி | சங்கானை | 25.02.1989 | புலிகள் |
| | குமார் | கம்பர்மலை விவிரி | 22.02.1989 | புலிகள் |
| மார்க்கண்டு நேசராசா | சுரேஸ் | | 10.02.1988 | புலிகள் |
| | வசந்தன் | கெருடாவில் | 07.02.1990 | புலிகள் |
| | றெஜி | | 03.02.1990 | புலிகள் |
| கனகரத்தினம் பாலசுப்ரமணியம் | மணியம் | பலாலி கிழக்கு வசாவிளான் | 23.02.1990 | புலிகள் |
| சின்னத்துரை தமிழ்செல்வன் | ரவி | சுன்னாகம் தெற்கு சுன்னாகம் | 16.02.1991 | புலிகள் |
| செல்லர் தங்கத்துரை | | சபாபதிப்பிள்ளை வீதி சுன்னாகம் | 20.02.1990 | புலிகள் |
| வஸ்ரியாம்பிள்ளை ஞனசீலன் | | நவாலி தெற்கு மானிப்பாய் | 25.02.1990 | |
| வடிவேலு மனோகரன் | | சுதுமலை தெற்கு சாவற்கட்டு | 00.02.1990 | புலிகள் |
| வல்லிபுரம் ஆனந்தசேகரம் | | மயிலிட்டி வடக்கு | 00.02.1990 | புலிகள் |
| தவசி நாகேஸ்வரன் | | மயிலிட்டி வடக்கு முலவை | 00.02.1990 | புலிகள் |
| கந்தசாமி குணரட்ணம் | | மயிலிட்டி வடக்கு முலவை | 00.02.1990 | புலிகள் |
| கந்தையா இராசரத்தினம் | | மயிலிட்டி வடக்கு | 00.02.1990 | புலிகள் |
| அ. ஸ்ரீபாலபிரேம்நாத் | பிறேம் | மயிலிட்டி | 25.02.1989 | புலிகள் |
| பாலன் நாகமுத்து | | முகாந்திரம் லேன் மல்லாகம் | 12.02.1990 | புலிகள் |
| அம்பலம் பன்னீர்செல்வம் | | பலாலி கிழக்கு பலாலி | 00.02.1990 | புலிகள் |
| கற்கண்டு | | பலாவி வடக்கு பலாலி | 00.02.1990 | புலிகள் |
| குமாரசாமி சுதாகரன் | | வீரப்பளை பலாலி கிழக்கு | 00.02.1990 | புலிகள் |
| கொஞ்சும்கிளி | | அன்ரனிபுரம் பலாலி | 00.02.1990 | புலிகள் |
| பொன்னப்பா எட்வேட் | | பலாலி சந்தி, பலாலி | 00.02.1990 | புலிகள் |
| பயஸ் அலோசியஸ் | | புதிய வீட்டு திட்டம், குருநகர் | 10.02.1990 | புலிகள் |
| சிவபாலசுந்தரம் சிவசிறி | | யாழ் வீதி, யாழ்ப்பாணம். | 12.02.1990 | புலிகள் |
| பொன்னுத்துரை பூமிநான் | | சரசாலை தெற்கு, சாவகச்சேரி | 12.02.1990 | புலிகள் |
| வில்லியம் காமினி ஜெயரத்ன | | புதிய வீட்டுத்திட்டம். குருநகர் | 08.02.1990 | புலிகள் |
| அன்ரனி கில்ரன் உதயகுமார் | | பாக் வீதி குருநகர் | 00.02.1990 | புலிகள் |
| பொன்னர் சிறிதரன் | குட்டி | மயிலங்காடு ஏழாலை தெற்கு | 28.02.1990 | புலிகள் |
| சிவபாதம் சுதாகரன் | கோபி | மட்டுவில் கிழக்கு சாவகச்சேரி. | 00.02.1990 | புலிகள் |
| மாணிக்கம் செல்வநாயகம் | நசீர் | இணுவில் மேற்கு, இணுவில் | 00.02.1990 | புலிகள் |
| நாகமணி மதிர்சன் | | மட்டுவில் கிழக்கு சாவகச்சேரி | 26.02.1990 | புலிகள் |

**ஜனவரி மாதத்தில் உயிர் நீத்த தோழர்களின் பெயர் விபரங்களை பிரசுரித்துள்ளோம். இங்கு தவற விடப்பட்ட தோழர்களின் விபரங்களை அனுப்பிவைத்து இவ் அட்டவணையைப் பூரணப்படுத்துவதற்கு உதவுமாறு தோழர்களின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாளர்கள், தோழர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். உயிர்நீத்த தோழர்களது நிழற்படங்கள் இருப்பின் அவற்றின் பிரதிகளையும் அனுப்பி உதவவும்.**

## இரணைமடு குடிநீர்த் திட்டம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டாம் வாய்க்கால், உருத்திரபுரம், சிவநகர் போன்ற பல பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குடியேற்றவாசிகள் குடியேறுவதற்கு முன் இரணைமடுக்குளம் பெரும் கமக்காரர்களின் ஏகபோக உரிமைக்குள் கட்டுப்பட்டிருந்தது. குடியேற்ற வாசிகளுக்கு நீர் விநியோகம் அரைஏக்கர், முக்கால் ஏக்கர், ஒரு ஏக்கர் என வருடாவருடம் நடைபெறும் “தண்ணீர்” கூட்டத்தில் தீர்மாணிக்கப்படும். பெரும் கமக்காரர் தம்மிடமுள்ள காணியின் விளை நிலத்தைப் பொறுத்து குடியேற்ற வாசிகளிலும் பார்க்க கூடுதலான பங்குத் தண்ணீரைப் பெற்று விவசாயம் செய்து வந்தனர். குளக்கட்டு உயர்த்தப்பட்டு குளத்தின் கொள்ளளவைக் கூட்ட அவர்களே பெரும் முயற்சியும் செய்து அதற்காகத் தமது சொந்தப் பணத்தையும் முதலீடு செய்து அவ்வுரிமையைப் பெற்றனர்.

திருவையாறு படித்த வாலிபர் திட்டம், கிராம விஸ்தரிப்புத் திட்டம் ஆகியவற்றில் ஏறக்குறைய ஐநூறு குடும்பத்தினர் இந்தக் குளத்து நீரையே நம்பி மேட்டுநிலப் பயிர்ச்செய்கையை செய்து வருகின்றனர்.

சிறுபோகம் ஆரம்பிக்கின்றபோது குளத்தினது நீரின் அளவு எத்தனை ஏக்கர் சாகுபடிக்கு போதுமானதாக இருக்கும் என்பதைனை கணக்கிலெடுத்து, குடியேற்ற வாசிகளுக்கு எத்தனை ஏக்கர் சொந்தமாக இருந்தாலும், ஒன்றுமுதல் இரண்டு ஏக்கர் வரையும் பெரும் கமக்காரர்களுக்கு அவர்களுக்குச் சொந்தமான நிலத்தின் கால்பங்கும், சிலசமயம் அதிலும் குறைய விஸ்தீரணம் கொண்ட காணியில் மட்டும் தான் நெற்சாகுபடி செய்ய அனுமதி கிடைக்கும். இதில் வேடிக்கை என்னவெனில் பல மைல் தூரம் நிலத்தில் நீர் செல்வதால் தண்ணீரை நிலம் உறிஞ்சி விடும் என்பதால் தமது தண்ணீர்ப் பங்கை குளத்திற்கு அருகில் உள்ள வேறு நிலத்திற்கு மாற்றி சாகுபடி செய்வதற்கு கமக்காரர்கள் அறிவுறுத்தப்படுவார்கள். அதுபோலவே வேறு காணி உரிமையாளரின் சம்மதப்படி குளத்திற்கு அருகாமையிலேயே நெற்சாகுபடி செய்ய அனுமதிக்கப்படுவர். எனவே சிறுபோகத்தில் குளத்தை அண்டிய பகுதிகளிலேயே நெற்சாகுபடி செய்யப்படும் இந்த நிலைமை சில அதிகாரிகளுக்கும், அரசாங்கத்திற்கும் தெரியாமற் போனது ஏனோ?

மக்களுக்கு குடிநீர் கொடுப்பது எமக்கு மோட்ச நிலையினை தரும் ஆனால் சிறுபோக வேளாண்மைக்கே தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கும்போது யாழ் குடாநாட்டில் இருக்கும் அனைவருக்கும் இரணைமடுக்குளத்திலிருந்து குடிநீர் கொடுப்பதென்பது கிளிநொச்சியின் விவசாயத்தையும் அழித்து, குடிநீருக்காக காத்திருக்கின்ற யாழ்குடாநாட்டு அப்பாவி மக்களையும் ஏமாற்றும் செயற்திட்டம் என்பதில் சந்தேகமில்லை. இந்த உண்மை தெரியவரும்போது எனது நிலைமை எப்படியிருக்கும் என்பதை நானறியேன். ஆனால் நிச்சயமாக எனது கருத்தைக் கேட்காமல் விட்டு விட்டோமே என்று பலர் வருத்தப்படுவார்கள்.

இத்திட்டத்திற்கான சிறந்த மாற்று வழி ஒன்று உண்டு “யாழ்பாணவாவித்திட்டம்” என 1948 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு அரைகுறையாக நிறுத்தப்பட்டிருக்கும் இத்திட்டத்தில் கவனஞ்செலுத்துவதே ஆகும். இத்திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி அன்றைய அரசுக்கு சரியான முறைப்படி தெரிவிக்காமையால் இடையில் கைவிடப்பட்டது. ஆனால் இத்திட்டத்தின் சில முக்கிய வேலைகள் பூர்த்தியாகி விட்டன. தொண்டமான் ஆற்றைச் சுற்றி ஒரு தடுப்புக் கதவும், அதேபோல் நாவற்குழியில் ஒரு தடுப்புக்கதவும் ஓரளவு பூர்த்தியாகியுள்ளன. சுண்டிக்குளத்தில் பலமிக்க ஓர் அணைக்கட்டு (DAM) கதவுகளுடன் அமைக்க வேண்டும். அத்துடன் ஆனையிறவு வடமராட்சிக் கடல் ஏரியை இணைக்கும் 5மைல் நீளமான வாய்க்கால் வெட்டி குறையில் உள்ளது. இவ்வாய்க்கலோடு சுண்டிக்குளம் அணைக்கட்டும் பூர்த்தியாகிவிட்டால் படிப்படியாக வருடாவருடம் ஏரியில் தேங்கி நிற்கும் தண்ணீ, உப்புத் தன்மை குறைந்து யாழ் குடாநாடு முழுவதும் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாகவும், உப்புத்தன்மை கொண்ட கிணறுகள் நன்னீராகவும் மாறும் வாய்ப்புகள் உண்டு. இத்திட்டத்தைப் பூர்த்தி செய்ய தற்போது இரணைமடுத் திட்டத்திற்கு செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள பணத்தில் ஒரு சிறு தொகையே போதுமானதாகும். இச்சிறு தொகையைத் தந்துதுவ ஜனாதிபதி ஏற்கனவே சம்மதம் தெரிவித்துள்ள போதிலும் யாழ் கடலேரி திட்டத்தை தடுக்க சதி செய்பவர்கள் யார்?

# அன்பார்ந்த நண்பர்களே! ஆற்றல் மிகு தோழர்களே!

இன்றைய நாட்களில் நாட்டில் நிலவும் அரசியல் நிலைமைகளையும் அத்துடன் சர்வதேசரீதியில் குறிப்பாக வட ஆபிரிக்க நாடுகளான எகிப்து மற்றும் ரியூனிசியா ஆகிய நாடுகளிலும் மேலும் சில மேற்காசிய நாடுகளிலும் ஏற்பட்டுள்ள மக்கள் எழுச்சிகளையும் ஆச்சரியங்களுடன் கேள்விப்படும் உங்கள் மனங்களில் எமது நாட்டிலும் அரசியல் மாற்றங்கள் நிகழுமா என பற்பல கேள்விகள் எழுந்துள்ளமை இயல்பான ஒன்றே ஆகும்.

இலங்கையில் அடித்துக் கொட்டியுள்ள மழை வெள்ளம் ஏற்படுத்தியுள்ள நாசங்கள் உங்கள் மத்தியில் பல விசனங்களை ஏற்படுத்தியிருக்கும். யுத்ததால் பாதிக்கப்பட்டு எழுந்து நிற்க முயலும் எமது மக்களுக்கு இயற்கையுமா எதிராக இருக்கிறது என்ற கவலையான எண்ணத்தை தோற்றுவித்தே இருக்கும்.

இலங்கையில் மட்டுமல்ல உலகம் பூராவும் அவுஸ்திரேலியா தொடக்கம் பிறேசில் வரை தொடர்ந்து நிகழும் மழை வெள்ள அனர்த்தங்களின் பிரமாண்டத்தையும் மேலும் வரலாறு காணாத வகையில் இங்கிலாந்து தொடக்கம் தென்கொரியா வரை இயற்கை அள்ளிக் கொட்டிய பனிகளையும் நீங்கள் கவலைகளோடு பார்க்கிறீர்கள்.

இந்த உலகில் ஒரு பகுதி மனிதர்கள் தங்கள் கைகளில் அரச அதிகாரங்களைக் குவித்து வைத்துக் கொண்டு தமது பொன்னாசைகளையும், மண்ணாசைகளையும், பெண்ணாசைகளையம் தீர்த்துக் கொள்வதில் குறியாயிருக்கிறார்கள். அவாப்பிடித்து நிற்கும் இவர்கள் இந்த அதிகாரங்கள் தமது கையை விட்டுப்பறி போய்விடாமல் இருப்பதற்காகக் கடுமையாக முயற்சிக்கிறார்கள். தமது அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு இராணுவத்தையும் பொலிஸையும் தம்மைச் சுற்றி வைத்துக் கொண்டு தமது தனிப்பட்ட ஏவல் வேலைக்காரர்களாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தங்களின் நலன்களுக்கு யாரும் குந்தகம் விளைவித்து விடுவார்களோ என்று பதட்டப்பட்டு அதற்காக கண்டவர்கள் மீதெல்லாம் சந்தேகப்பட்டு எல்லா மனித விரோத சமூக விரோத செயல்களிலும் ஈடுபடுகிறார்கள்

இதேவேளை மற்றொரு பகுதியினரோ அந்த அதிகாரங்களைத் தாங்களும் கைப்பற்றி அந்த வளங்களை தாங்களும் அள்ளிக்குவித்து அனுபவிக்கும் நாளுக்காக விடாமுயற்சி செய்கிறார்கள். அவர்களும் பொய் வாக்குறுதிகளையும் போலி அரசியல் நாடகங்களையும் அள்ளி விடுவதில் நாக்கூசாமலே செயற்படுகிறார்கள். அவர்களும் அதிகாரத்துக்கு வந்தால் மக்களை மறந்து விடுவதென்பதே கடந்தகாலம். மக்களும் அதைப் புரிந்தோ புரியாமலோ மாற்றம் தேவை என்பதற்காக அவர்களோடு கை கோர்க்கிறார்கள்.

ஆனாலும் அதிகாரத்தில் இருக்கும் அரசு தமக்கும் தமது நாட்டுக்கும் மிகவும் பாதகமாக இருக்கிறது எனக் காணுகிற, எண்ணுகிற பெரும்பாலோர் தமது நாட்டு அரசியலில் மாற்றங்கள் ஏற்படாதா என்று உண்மையிலேயே கவலைப்பட்டுக் கொண்டிருக்கிருக்கிறார்கள். அந்த மாற்றங்களுக்கான சந்தர்ப்பங்களுக்காக ஏங்கிக் கொணடிருக்கிறார்கள்.

அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தும் ஆர்வத்துடன் மக்கள் கொள்ளுகின்ற சீற்றங்கள் மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றங்களையே எப்போதும் கொண்டு வரும் என்றில்லை. பல தடவைகளில் ஒரு ஆள் போய் இன்னொரு ஆள் அந்த அதிகார இடத்துக்கு வருவார். அல்லது ஒரு கட்சி போய் இன்னொரு கட்சி அந்த இடத்துக்க வரும். இதனால் மக்களின் வாழ்வு நிலையிலோ தேசத்தின் வளர்ச்சி நிலையிலோ ஒரு மாற்றமும் ஏற்படுவதில்லை.

ஆனால் இயற்கை சீறினால் விளைவு அவ்வாறல்ல. சில நிமிடங்களுக்குள் பல லட்சம் மக்கள் கொல்லப்பட்டு விடுவார்கள். அதற்கு எந்த இனமென்பதோ எந்த சாதியென்பதோ எந்த நிறமென்பதோ விதிவிலக்கல்ல. புவியின் சூழல் அமைப்புக்களும் ஜீவராசிகள் அனைத்தினதும் வாழ்வு நிலைகளும் மாற்றப்பட்டுவிடும்.

ஐஸ்லாந்தின் ஓர் எரிமலை புகையைக் கக்கியதால் ஐரோப்பா முழுவதுமே சில வாரங்களுக்கு ஸ்தம்பிதமாகியது. எமது கிழக்கு மாகாணம் மட்டுமல்ல. அவுஸ்திரேலியா தொடக்கம் பிறேசில் வரை கடும் மழை பெரும் வெள்ளமாகி ஆறுகள் பெருக்கெடுத்து கடல்களின் நீர் மட்டங்களை உயர்த்திவிட்டன. உலகத்தின் பல நிலப்பரப்புகளை எல்லைகள் எதுவுமே இல்லாத கடல் நாளாந்தம் விழுங்கிக் கொண்டிருக்கிறது.



மனித இனத்தின் பொருளாதார வளர்ச்சி இயற்கையின் சமநிலையைச் சங்கடப்படுத்துகிறது. காடுகள் அழிகின்றன. மனிதன் எரிசக்திகளை அதிகமாகப் பாவிக்க அவை புவியின் வெப்பநிலையை அதிகரிக்கின்றன. இதனால் துருவத்தின் பனிப்பாறைகள் உருகி ஆறுகளாகின்றன அல்லது ஆவியாகின்றன. அளவுக்கு மீறிய பனிப்பொழிவுகள் பல நாடுகளின் பெரும்பகுதிகளை உயிரினங்களே வாழ முடியாத பகுதிகளாக ஆக்கிக்கொண்டிருக்கிறது.

இலங்கையின் கடற்கரைப் பகுதிகள் இங்கே மக்கள் பார்த்துக் கொண்டிருக்க அங்குலம் அங்குலமாக கடலுக்குள் போய்க் கொண்டிருக்கின்றன என கடற்கரை வாழ் மக்கள் சாட்சியம் கூறுகிறார்கள். மலையகத்தில் தொடர்ந்த மண்சரிவுகள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. மழை நின்றாலும் மண்சரிவுகள் நிற்பதாக இல்லை. கிழக்கு மாகாணம் முழுவதுவும் ஆறெங்கே குளமெங்கே ஏரிகளின் எல்லைகளெங்கே என்று தெரியாத அளவுக்கு வெள்ளம் பரந்து கிடக்கிறது. வெள்ளம் பழைய நிலைகளை நோக்கி வடிந்து கொண்டிருந்தாலும் அழிந்து போன வயல்களை மீட்பதற்கு முதலில் மீண்டும் அடுத்த பருவகால மழை வந்துவிடுமோ என மக்கள் அஞ்சுகின்றனர். உலகின் மிகப் பெரிய பயங்கரவாத யுத்தத்தை வென்றதாகப் பெருமை கொள்ளும் இலங்கை அரசினால் இங்கு எதுவும் செய்ய முடியவில்லை.

மரக்கறிகளின் விலைகள் ரூபா நூற்றிஐம்பதுக்கு மேல், தேங்காய் விலை ரூபா ஐம்பதுக்கு மேல், முட்டையொன்றின் விலை ரூபா பதினெட்டு, பாண் விலை ரூபா ஐம்பது, ரூபா அறுபதுக்குக் குறைவாக அரிசி கிடையாது, சீனியின் விலை ரூபா நூறு, பருப்புகளின் விலை கிலோ ரூபா நூற்றியெண்பது, பச்சை மிளகாயை இப்போது பெரும் பணக்காரர்கள் மட்டுமே வாங்கலாம். மாமிச உணவுப் பொருள் எது வாங்குவதாக இருந்தாலும் கிலோ ரூபா ஐந்நூறு. நாளாந்தக் கூலியோ ரூபா 500 மட்டும்தான், இராணுவத்தில் இருந்தால் தான் நாளுக்கு ரூபா 1000 சராசரியாகக் கிடைக்கும்.

நாட்டில் அரசியல் யுத்தத்தை வெற்றி கொண்ட இராணுவம் இனி பொருளாதார அபிவிருத்திக்கான யத்தத்தில் வெற்றிக்காக செயற்படும் என்று சொல்லப்பட்டதே! அதனது விளைவுகள் தானா இந்த விலைகள்.

யுத்தத்துக்காக மக்களே வயிற்றைக் கட்டுங்கள், வாயைக் கட்டுங்கள் என்றார்கள். யுத்தம் முடிந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போதும் எப்படி ஏன் எதற்காக இந்த நிலை என்று மக்கள் தெற்கு வடக்கு மேற்கு கிழக்கு என்ற வேறுபாடில்லாமல் ஊமைகளாய் அழுகிறார்கள். மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட அரசாங்கம் இன்னமும் இறைமை, தேசிய ஒற்றுமை, பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாப்பு என்ற வசனங்களை மட்டும் கூட்டம் கூட்டமாகக் கொண்டு திரிந்து ஆட்சி நடத்துவது போதியதுதானா? நாட்டில் பொருளாதார மாற்றங்கள் எதனையும் அரசாங்கம் நிகழ்த்துவதற்கான எந்த அடையாளங்களையம் இன்னமும் காட்டவில்லை. எந்தத் திட்டத்தையும் கொண்டிருப்தாகத் தெரியவில்லை.

யுத்தத்தால் அகதிகளான மக்கள் பொரும்பாலும் அவரது இடங்களில் போய் குடியேறி விட்டார்கள். ஐயாயிரம் ரூபா காசையும் ஆறு மாத ரேசனையும், ஏழெட்டு தகரங்களையும் அகதிகளான மக்களுக்குக் கொடுத்ததோடு அரசாங்கத்தின் புனர்வாழ்வுத் திட்டம் பூர்த்தி அடைந்து விட்டதா? அரச சார்பற்ற நிறுவனங்களை இதில் கட்டுப்படுத்தும் அரசாங்கம் தானும் போதிய அளவு உதவிகளை மக்களுக்கு வழங்காமல் மற்றவர்களையம் மக்களுக்கு உதவி செய்யவிடாமல் தடுப்பது அரசாங்கத்தின் உள் நோக்கங்கள் பற்றிய சந்தேகங்களையே கிளப்புகின்றன. மக்களுக்கு விரோதமான உள்நோக்கம் எதுவும் இல்லை என்று அரசாங்கம் கருதுமானால் பல திருத்தமான அணுகுமுறைகளை அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டும்.

நாட்டில் ஜனநாயகத்தின் மறுமலர்ச்சிக்கும், விரைந்த புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணத் திட்டங்களை திறம்பட முன்னெடுப்பதற்கும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி முன்னேறுவதற்கும் அதிகாரப் பகிர்வு முதன்மையான ஒன்று என நாம் வலியுறுத்திய போது ஜனாதிபதி அவர்கள் முதலில் ஜனநாயகம் அடுத்து அபிவிருத்தி அதற்குப் பின்னரே அதிகாரப் பகிர்வு சாத்தியம் என்றார். நாம் அதனை அங்கீகரிக்காத போதிலும் அப்படியாவது நடக்கட்டும் என ஏற்றுக் கொண்டோம். ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு ஆதரவளித்தோம்.

ஆறு வருடங்களாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களின் தலைமையில் நடந்த பேச்சவார்த்தைகள் அர்த்தமற்றவையாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதிகாரப்பகிர்வு தான் இல்லையென்று பார்த்தாலும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் எல்லாம் போலியானவைகளாக உள்ளன. போரால் நலிந்து போன தமிழர்கள் முடிந்தால் தாங்களாக தவண்டு நிமிர்ந்து எழுந்து நிற்கட்டும் பார்ப்போம் என்ற சவாலுக்குள் அரசினால் விடப்பட்டிருக்கின்றார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

புணர்நிர்மாண நடவடிக்கைகள் ஓரிரண்டு வீதிகள் பாலங்களுக்கு அப்பால் ஆமை வேகத்திலேயே நகருகின்றன. நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது அரசாங்கத்தை அண்டிப் பிழைக்கும் அல்லது அமைச்சர்களுக்கு தண்டிக் கொடுக்கும் ஒரு சிறு கூட்டத்தினரின் அபிவிருத்தியாக மட்டுமே அமைகிறது.

புலிகள் ஒழிக்கப்பட்ட நிலையில் ஜனநாயக மறுமலர்ச்சி ஏற்புடும் மக்களின் அடிப்படை மற்றும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று பார்த்தால் நடைமுறையில் கவலைக்குரிய பல விடயங்களே நடக்கின்றன. புலிகளாக இருந்த இளைஞர்களுக்கு அரசு புனர்வாழ்வளிப்பதில் அக்கறை காட்டுவது மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றே. புலிகளின் பினாமிகளாக இருந்து கோடி கோடியாக மக்களின் பணங்களைச் சுருட்டிக் கொண்டவர்கள் அரசாங்கத்தைச் சேர்ந்த சிலரோடு பங்குதாரர்களாக கூட்டு வியாபாரங்களில் ஈடுபட்டிருப்பதில் எமக்குக் கவலையில்லை. ஆனால் இங்கு புலிகளின் அரசியலுக்கே புனர்வாழ்வளிக்கப்பட்டு அது மீண்டும் தமிழர்களின் மத்தியில் புதிய வடிவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு விடுமோ என்ற அச்சம் ஜனநாயக சக்திகள் மத்தியில் எழுந்திருக்கின்றன. புலிகளாலேயே தமிழர்களின் நியாயமான அபிலாஷைகள் நலிவுற்றன என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதே புலிகளுக்கு புதிய வாழ்வளிப்பதன் மூலம் தமிழர்கள் எப்போதுமே கௌரவமான அரசியற் பிரஜைகளாக எழுந்து நிமிர்ந்து விடக்கூடாது என்ற நோக்கம் கொண்ட சகுனி வியூகம் ஒன்று இங்கு வளைக்கப்படுகிறதோ என சிந்திக்க வேண்டியிருக்கிறது.

புலிகளின் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட போது நாட்டு மக்கள் தமக்கு இரண்டாவது தடவையாக சுதந்திரம் கிடைத்து விட்டது என மகிழ்ந்தார்கள். ஆனால் நாட்கள் போகப் போக மக்கள் தமது அடிப்படைப் பொருளாதார வாழ்வுக்கும் அடிப்டையான சுதந்திரங்களுக்கும் ஆபத்து வந்தவிடுமோ என்று அஞ்சுகின்ற நிலை அதிகரித்து வருவதையே எம்மால் உணர முடிகின்றது.

நமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் எந்தக்கட்டத்திலும் பிரபாகரனைப் போல நானே தலைவன், என் பின்னாலேயே மக்கள் நிற்கிறார்கள், நினைத்ததையெல்லாம் நான் செய்வேன் என்று சிந்திக்க முற்படக்கூடாது என்று மனதார விரும்புகிறோம்.

பிரபாகரனின் அகங்காரமே புலிகளை அளித்தது. பிரபாகரன் போல சிந்திப்பது ஒரு நல்ல தலைவனுக்கு அழகுமல்ல, சரியானதுமல்ல, பாதகாப்பானதுமல்ல. அதுவும் பொறுப்புள்ள ஒரு அரச தலைவர் பிரபாகரனை தனக்கு உதாரணமாக எடுத்து விடக்கூடாது.

இலங்கை போன்ற பல்லினங்களைக் கொண்ட ஒரு நாட்டின் தலைவரிடம் தான் நாட்டிலுள்ள எல்லா மக்களுக்குமான தலைமைப் பொறுப்புடையவர் என்ற பரந்த மனம் வேண்டும். தான் சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவர் என்றோ, தான் பௌத்த மதத்தைச் சேர்ந்த ஒருவர் என்றோ இல்லாமல் எல்லா இனத்துக்கும் தாம் உரியவர், தான் எல்லா மதத்தவர்க்கும் உரியவர் என்பதை எல்லா மக்களும் உணரும் வகையாக நிலைநாட்ட வேண்டும்.

படைபல பெருமிதமோ பாராளுமன்ற பெரும்பான்மை இருக்கிறது என்ற செருக்கோ ஒரு நல்ல தலைவனுக்கு நீண்ட காலத்துக்கு உதவாது. வல்லமை வேண்டும், ஆனால் நல்லதல்லாத வல்லமை நாசத்தையே விளைவிக்கும்.

மஹிந்த அவர்கள் தமது பெயருக்கு ஏற்றாற் போல் தர்ம நெறிமுறைகள் தவறாது நீதியை நிலை நாட்டுவதில் உறுதி கொள்ள வேண்டும். தனது சுயநலன்களுக்கு அப்பால் நாட்டில் ஜனநாயக விழுமியங்களையும் சட்டத்தின் ஆட்சிக்கான தளங்களையும் உறுதியாக நிலைநாட்டுவதில் தீர்மானகரமான அக்கறை காட்ட வேண்டும். பாதிக்கப்பட்டு நிற்கும் மக்களுக்கு, பயந்து நிற்கும் சிறுபான்மை இனங்களுக்கு ஆபத்பாந்தவனாக அபயம் அளிப்பவராக, சம நீதி வழங்குபவராக இருக்க வேண்டும்.

நாட்டில் இப்போது நிலவும் அரசியல் பொருளாதார நிலைமைகளோ அல்லது நிகழும் காலநிலைகளோ மகிழ்ச்சி அளிப்பதாக இல்லாதிருப்பினும் மக்கள் வரலாறு பூராவும் மனதால் வாழ்த்தும் தலைவராக ஜனாதிபதி மஹிந்த அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் நம்பிக்கைகளை வளர்க்கும் மாற்றங்களை ஆக்க வேண்டும் என விரும்புவோமாக!

இப்படிக்கு

அ.வரதராஜப்பெருமாள்

# ஆசியாவின் அதிசயமாக வேண்டுமானால்

## அதிகாரப்பகிர்வு செயற்படுத்தப்பட வேண்டும்! அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்! அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்!



பல நாடுகளில் ஆட்சியாளர்கள் நாட்டைத் தமது கால்நடைத் தொழுவங்களாக மாற்றிவிட முயல்கிறார்கள் ஆனால் நாட்டு மக்கள் எப்போதும் அடங்கிக் கிடப்பதில்லை. அரசியல் சந்தர்ப்ப மாற்றங்கள் உரிய சமயங்களில் மக்களை ஒரு பிரளயமாகக் கிளர்ச்சி பெற வைக்கிறது. அங்கு சீறும் எரிமலை அக்கினியைப் பிரசவிப்பது போல் மக்கள் குரல் மண்ணை நடுங்க வைக்கிறது. அந்த எழுச்சி மக்கள் புரட்சியை லாவாக்கள் போல் பிரவாகித்து ஓட வைக்கிறது.

ரீயுனீசியாவிலும் - எகிப்திலும் அது தான் இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ரியுனீசியாவின் சர்வாதிகாரி தான் சாசுவதமானவன் - நிலையானவன் என்ற அகங்காரத்தில் செயற்பட்டார். ஆனால் ரியுனீசியாவின் சாமானிய மக்களோ ஆகா என்று எழுந்தது பார் யுகப் புரட்சி என்ற பாரதியின் வரிகளின் விதமாய் எழுந்து நிற்கிறார்கள்.

1970 களின் பிற்பகுதியில் தன்னை அசைக்க யாராலும் முடியாது என நினைத்த 'ஷாப.'.லவி தனது மயிலாசனத்தை இழந்து ஓட வேண்டியேற்பட்டது. ஈரானிய மக்கள் வீதியில் திரள் திரளாய் இறங்கிப் போராடி மன்னர் 'ஷாவின் ஆட்சிக்கு சாவு மணி அடித்தார்கள்.

1970 களில் ஊழலிலே மூழ்கிப் போயிருந்த சமோசாவின் அடக்குமுறை ஆட்சி அமெரிக்காவின் முழு ஆதரவையும் பெற்றிருந்த போதும் நிக்கரக்குவா மக்களின் எழுச்சியில் காணாமலே போய்விட்டது. இருபத்தைந்து ஆண்டுகள் இராணுவ அகங்காரம் கொண்டு செயற்பட்டு வந்த பினாட்சே கடைசியாக தனது நோய் பிடித்த வயசைக் காரணம் காட்டி மன்னிப்புக் கேட்டு உயிர்வாழ வேண்டியேற்பட்டது. பிலிப்பைன்ஸின் மார்க்கோசும் இந்தோனேசியாவின் சுகார்ட்டோவும் இருபந்தைந்து ஆண்டுகளுக்கு மேல் திமிர் பிடித்த ஆட்சி நடத்தி விட்டு கடைசியாக தேசத்தின் சொத்துக்களைக் கொள்ளையடித்துக் கொண்டு கள்ளர்கள் போல் அமெரிக்காவில் தஞ்சம் புகுந்தார்கள்.

ஓர் அரசு மக்களுடன் அது கொண்டுள்ள சமூக ஒப்பந்தத்தை மீறிச் செயற்பட்டால் -தனது அதிகாரங்களையும் படைபட்டாளங்களையும் துப்பிரயோகங்கள் செய்தால் அந்தத் தேச மக்கள் எந்த வகையிலும் செயற்பட்டு அந்த அரசைத் தூக்கி எறியவும் தாம் விரும்பிய புதிய அரசை உருவாக்கவும் ஆன அடிப்படை ஜனநாயக உரிமை அந்த நாட்டின் பொதுமக்களுக்கு உண்டு என்பதை பிரெஞ்சுப் புரட்சியின் காலம் தொட்டு அனைத்து அரசியல் ஞானிகளும் அங்கீகரித்து வந்திருக்கிறார்கள்.

இப்போது ரியுனீசியாவின் ஆட்சி மக்களின் கைகளில் வீழ்ந்து விட்டது:

எகிப்தில் முப்பது ஆண்டுகளாக தன்னை அசைக்க யாரும் இல்லை என்றிருந்த ஹொஸ்னி முபாரக் இப்போது தான் ஆட்சியை விட்டு வெளியேறுவதற்கு மக்களிடம் சிறு கால அவகாசம் கேட்டுக் கெஞ்சுகிறார். யேமனிலும் இருக்கும் ஆட்சி இந்தா அந்தாவென நிலை தடுமாறிக் கொண்டிருக்கிறது.

□ஒபாமா அரசு ஹொஸ்னி முபாரக்கை வீட்டுக்கு அனுப்ப உதவ வேண்டும். ஜனநாயக இயக்கம் அமெரிக்காவுக்கு ஆதரவாக இல்லாவிட்டாலும் அதற்கு அமெரிக்கா உதவும்.□ என்று ஜனாதிபதி ஒபாமா சொன்னதை ஞாபகப்படுத்தி ரைம் சஞ்சிகை ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது

உலகநாடுகளின் நியாயமான வேண்டுகோள்களையெல்லாம் புறக்கணித்து இருபது ஆண்டுகளாக மியான்மார் (பர்மா) மக்களின் ஜனநாயகத் தலைவியான ஆங் சாங் சுகியை தடுப்புக் காவலில் வைத்திருக்கும் மியான்மார் இராணுவ சர்வாதிகார ஜூண்டா ஆட்சியினர் இப்போது வளர்ந்துவரும் மக்கள் கிளர்ச்சிகளைச் சமாளிப்பதற்காக மோசடித்தனமாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடாளுமன்றத்தை முதன்முதலாக இப்போதுதான் கூட்டுகின்றனர்.

எனவே தேசங்களின் அரச பீடங்களில் அமர்ந்திருப்பவர்களல்ல மாறாக தேசத்தின் மக்களே அரசியல் வரலாற்றைப் படைப்பவர்கள் என்பது இங்கு மீண்டும் மீண்டும் நிருபிக்கப்பட்டுள்ளது.

தேசிய எழுச்சிகளுக்கும் வர்க்கப் புரட்சிகளுக்குமிடையே பெரும் தடை மதில்களை எழுப்பிவிட முடியாது. வட ஆபிரிக்காவிலும் நைல்நதி ஓரங்களிலும் ஜனநாயகப் புரட்சிகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. தென்னமெரிக்காவில் வேறு விதமாக மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நேபாளம் இப்போதுதான் எதிர்வரும் ஐந்து வருடத்துக்கான பிரதமரைக் கண்டிருக்கிறது போல் தெரிகிறது. மீண்டும் குழப்பம் எப்போது என்று தெரியவில்லை. பாகிஸ்த்தானில் இஸ்லாமிசமும் இராணுவ ஆதிக்கமும் இரண்டு நாய்கள் ஒன்றினது வாலை மற்றொன்று கடித்து நிற்பது போல் நிற்கின்றன.

மனிதகுலம் நிறைவான அடிப்படைத் தேவைகளையும் நாகரீகமான, சுதந்திரமான வாழ்வையுமே கோரி நிற்கிறது. இராணுவ மயப்பட்ட சர்வாதிகார அராஜக ஆட்சிகள் எப்போதும் வாள் முனையிற்தான் நடக்க வேண்டியிருக்கும். அந்த ஆட்சியாளர்கள் தேசத்தின் வளங்கள் அனைத்தையும் தமது தன்னிச்சையான அதிகாரத்தின் கீழ் வைத்திருக்கலாம். தாம் நினைத்தபடி தமக்கென அள்ளிச் சுருட்டிக் கொள்ளலாம் அல்லது யாருக்கும் தாம் அதிகாரத்தில் இருக்கும் வரை அள்ளிக் கொடுக்கலாம். தமது கட்டுப்பாட்டில் உள்ள படைபட்டாளங்களை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். ஆனால் ஒரு நாள்த் தன்னும் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியாது. முடிவில் அவர்கள் தேசத்தை விட்டோடி அவமானப் பட்ட வாழ்க்கையுடனேயே அல்லற்பட வேண்டியிருக்கும்.

ஒரு நாட்டின் ஆட்சி நல்லதாக, மக்களின் வாழ்த்தை மனதாரப் பெற்றதாக, மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றதாக இருக்க வேண்டுமாயின் அந்த ஆட்சியினர்:-

- அந்த நாட்டு மக்களுக்கு அவர்களின் வருமானத்துக்குள் திருப்திகரமான வாழ்வை நியாயமான அளவுக்கு பெறக் கூடியதாக இருக்க வேண்டும்.
- அந்த நாட்டு மக்கள் அனைவரும் அடிப்படைச் சுதந்திரங்கள் அனைத்தையும் அனுபவிப்பதக்கு முழுமையான உத்தரவாதம் வழங்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும்,
- சட்டத்தின் முன் சகலரும் சமம் மேலும் சட்டத்தின்படியே சகல ஆட்சியும் எனும் நிலை கட்டாயம் வேண்டும்
- அந்த நாட்டின் அரச நிர்வாகங்கள் ஊழலற்றவையாகவும் மோசடிகளற்றவையாகவும் மக்களின் சேவகர்களாகவும் செயற்பட வேண்டும்
- அரச அமைச்சர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிளைக் கண்டு மக்கள் அஞ்சாத நிலை வேண்டும். மக்கள் அவர்களைச் சுலபமாக அணுகும் வகை வேண்டும்
- சுதந்திரமாகவும் நியாயமாகவும் செயற்படும் நீதிமுறை வேண்டும்
- பல்லினங்களைக் கொண்ட நாடாக இருந்தால் அந்த நாட்டில் உள்ள அனைத்து இனஙகளும் தாஙகள் சமத்துவமாக நடாத்தப் படுபவர்களாகவும், அனைத்து இனங்களும் சகோதரத்துவத்துவுடன் வாழும் உணர்வு நிலை பெற்றவர்களாகவும், பெரும்பான்மை இனத்தவர்களால் சிறுபான்மை இனத்தவர்கள் எந்த வகையிலும் அச்சுறுத்தப்படாதவர்களாகவும் இருக்கும் நிலை வேண்டும்
- அந்த நாட்டின் படை அமைப்புக்கள் அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுபவையாகவும் மொழி மத முரண்பாடற்றவைகளாகவும், பாரபட்சம் காட்டாதவைகளாவும், அரச படைகளை கண்டு மக்கள் அஞ்சாதவர்களாகவும் இருக்கும் நிலை வேண்டும்
- அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் மருத்துவ வசதி வாய்ப்பு என்பன உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்,
- வேலையற்ற இளைஞர்கள் நாட்டில் பரிதாபத்துக்கு உரியவர்களல்லாத நிலை வேண்டும்
- வயது முதிர்ந்தவர்களுக்கெல்லாம் அடிப்படை உயிர்வாழ்வத் தேவைகள் கிடைக்கும் நிலை உறுதிப்பட்டிருக்க வேண்டும்
- பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பாகவும் முன்னுரிமைகளுடனும் வாழும் நிலை உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையின் அறுபத்தி நான்காவது சுதந்திர தினத்தன்று ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் இலங்கையை ஆசியாவின் அதிசயமாக முன்னேற்றப் போவதாக சூழுரைத்திருக்கிறார். இந்நிலையில் இங்கு மேலே கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கை அரசு சுயபரிசோதனை செய்து பார்க்க வேண்டும். ஆசியாவின் அதிசமாக மாறும் தகைமையை இலங்கை கொண்டிருக்கிறதா? அவ்வாறானதொரு நிலையை எய்துவதற்குரிய அடிப்படைகளைக் கட்டியமைக்கும் வல்லமையும் உண்மையான திட்டமும் தனது அரசுக்கு இருக்கிறதா என்பவை பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக' அவர்கள் நேர்மையானதொரு சுய மீளாய்வினை செய்தல் வேண்டும்

ஆசியாவில் பல நாடுகள் வியக்கத்தக்க அதிசயங்களை நிகழ்த்தியிருக்கின்றன என்பது உண்மைதான்.

- யப்பான் உலக பொருளாதாரத்திலேயே ஒரு பேரதிசயத்தை நிகழ்த்தியிருக்கின்றது.
- 1960ம் ஆண்டின்போது இலங்கையைவிடப் பின்தங்கிய நாடுகளாக இருந்த தென் கொரியாவும், தைவானும் சிங்கப்பூரும் மலேசியாவும் புதிய கைத்தொழிற் தேசங்கள் எனும் அதிசயத்தை நிகழ்த்தியிருக்கின்றன.
- தாய்லாந்தும் பாராட்டத்தகு முன்னேற்றங்களைப் பல துறைகளில் எய்தியிருக்கின்றது.
- 1980களில் மூலதனப் பொருளாதாரத்துக்கு காலடியெடுத்து வைத்த சீனாவின் பொருளாதாரமும் அதன் கட்டுமானங்களும் உலகின் பொருளாதார வல்லரசுகளையே உலுப்பும் வகையில் இன்று எழுப்பிவிடப்பட்ட சிங்கமென சிலிர்த்து நிற்கிறது.
- 1975ல் தான் அமெரிக்காவின் காட்டுமிராண்டித்தனத்தில் இருந்து வியட்நாம் விடுபட்டது. அது அனைத்துத் துறைகளிலும் இப்போது வேகமாக விரைந்து வளர்கிறது.
- 1991லே தான் புதிய திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கிய இந்தியா இன்னமும் மிகப் பெரிய அளவில் வறியவர்களைக் கொண்ட நாடாகவம் மிகப் பின்தங்கிய பல்லாயிரம் கிராமங்களைக் கொண்டிருக்கிற போதிலும் அதன் மொத்த தேசிய பொருளாதார பலம் வியக்கத் தக்க பலமுடையதாக ஆகியுள்ளது. இன்னுமொரு பத்தாண்டில் இந்தியா உலகின் மூன்றாவது பொருளாதார இராணுவ பலம் கொண்ட நாடாகிவிடும்.
- இவ்வாறான ஒரு நிலையில் இலங்கை எங்கே நிற்கிறது. இலங்கையின் தலாநபர் வருமானம் இரண்டாயிரம் டொலர்களைத் தாண்டிவிட்டது என அரசின் மத்திய வங்கி அறிக்கை பெருமையாகக் காட்டுகிறது என்பது உண்மைதான். ஆனால் இதன் பொருளாதார ஆற்றல் எவ்வளவு எனும் கேள்விக்கான முழுமையான விடையில் தான் அதற்கான சாராம்சத்தைக் காண முடியும்.
- இலங்கையின் மூன்றில் ஒரு பாகம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக யுத்தத்தில் மூழ்கடிக்கப்பட்டுக் கிடந்தது. யுத்தம் முடிவடைந்து 2 ஆண்டுகள் ஆகியும் நாடு இன்னமும் நிரந்தர சமாதானத்தை எய்திவிட்ட உத்தரவாதத்தைக் காட்டவில்லை.
- இலங்கையின் ஒவ்வொரு குடிமகனும் பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய கடனாளிகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.
- யுத்தத்தில் அரசு வெற்றி கண்டிருந்தாலும் வடக்கு கிழக்கு மக்களின் சம்மதித்த சந்தோசத்தை இன்னமும் அரசு நிலைநாட்டவில்லை. அதிகாரப் பகிர்வின் அடிப்படையிலான அரசியல் சமாதானம் என்பது அபிவிருத்திக்கு அவசியம் என்பதை இன்னமும் அரசு உளப்பூர்வமாக உணர்ந்ததாகத் தெரியவில்லை.
- அரச வருமானத்தில் 40 வீத வருமானத்தை இராணுவ செலவினங்கள் கபளீகரம் செய்து கொள்ளுகின்றன. யுத்தம் முடிவடைந்தாலும் இதில் ஒரு குறைப்பும் ஏற்படவில்லை.
- அரசாங்க வரவோடு ஒப்பிடுகையில் அதன் செலவின் தொகை 60 சதவீதத்தால் அதிகமாகும். இதனை கடன்கள் மூலமே அரசு சமாளிக்கிறது. வாங்கும் கடனில் சுமார் மூன்றில் ஒரு பங்கை அரசு தான் வாங்கிய கடனுக்கு வட்டியாகச் செலுத்துவதற்கும் மற்றொரு மூன்றில் ஒரு பங்கை முன்னர் பெற்ற கடனில் ஒரு பகுதியை மீளச் செலுத்துவதற்காகவுமே பயன்படுத்துகிறது.
- இலங்கை ஒரு றோட்டைப் போடுவதாக இருந்தாலும் சரி அல்லது ஒரு பாலத்தைக் கட்டுவதாக இருந்தாலும் சரி வெளிநாட்டு உதவி இல்லாமல் செய்ய முடியாது என்ற நிலையிலேயே இலங்கைப் பொருளாதாரத்தை அரசின் முகாமை இயக்குகிறது.
- இலங்கை மேற்கத்தைய நாடுகளோடு சவால் விட்டு நிற்கிறது. இதனால் அவை பொருளாதார ரீதியாகவும் பல நெருக்கடிகளை கொடுக்கின்றன. இந்தியாவையும் சீனாவையும் சில மேற்காசிய நாடுகளையும் உதவிக்கு நம்பி எத்தனை காலம் ஓட்ட முடியும். இந்தியாவும் சீனாவும் இலங்கையுடனான தமது நல்ல உறவின் காரணமாக என்பதை விட தமக்கிடையேயான போட்டியின் காரணமாகவே இலங்கைக்கு உதவுகின்றன. இந்த இரு வல்லரசுகளுக்கு இடையிலான தந்திர ஓட்டத்தில் எங்கு கீறல் விழுந்தாலும் இலங்கை பாரதூரமாக நசுங்கிவிடும்



- 1977ம் ஆண்டிலிருந்து இலங்கை திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தாலும் இன்னமும் இலங்கை அதனது ஏற்றமதிப் பொருட்களின் மூலமான வருமானத்துக்கு அடிப்டையில் மலையக விவசாய உற்பத்திகளையே நம்பியிருக்கின்றது. அடுத்ததாக இலங்கையிலிருந்து வெளியேறிய இலங்கையர்கள் அனுப்பும் பணமே பெரிது. இலங்கையின் விவசாயத்திலோ தொழிற்துறையிலோ குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதனையும் இலங்கை இன்னமும் சாதிக்கவில்லை.
- இலங்கையின் மொத்த பயிர் செய் விவசாய நிலங்களில் 60 சதவீதத்துக்கு மேற்பட்டவை தாராளமான நீர்ப்பாசன நிலங்கள். ஆனால் இலங்கையின் விவசாய உற்பத்தித் திறன் பாராட்டத்தக்கதாக இல்லை. அரிசியும், தேங்காயும், குறைந்த விலை மீன்வகைகளும், அமெரிக்க உதவியில் கிடைக்கும் கோதுமை மாவுமே இலங்கையின் அரைவாசி மக்களின் உயிரைக் காப்பாற்றி வைத்திருக்கின்றன. உழைப்புக்களின் உற்பத்தித்திறனை ஒப்பிட்டுக் கணக்கிட்டால் மிகப்பலவீனமான நிலையையே. இலங்கை கொண்டிருக்கிறது.
- இதுகாலவரை வடக்கு கிழக்கு இளைஞர்களின் வேலைவாய்ப்பில் வாழ்க்கைத் தரத்தில் அரசுக்குப் பெரும் பொறுப்ப இருக்கவில்லை. தென்னிலங்கை இளைஞர்களுக்கோ இராணுவ வேலைவாய்ப்புக்களே பெரிதும் தஞ்சம். ஆனால், இனிவரும் காலம் அவ்வாறில்லை.

இலங்கைக்கு அதன் பொருளாதாரம் பற்றிய புதிய பார்வையும் அணுகுமுறையும் வேண்டும். இலங்கை வெளிநாடுகளுடனான அதனது உறவுகளை அதன் யுத்தக் கண்ணோட்டத்திலேயே அணுகியது. அது இனிப் பொருந்தாது. 35 ஆண்டு கால திறந்த பொருளாதாரம் காத்திரமான அடித்தளம் எதனையும் இலங்கைக்கு வழங்கவில்லை. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பிரதேசங்களுக்கும் புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணங்களுக்காக வழங்கப்படும் உதவிகள் நாட்டின் நீண்டகால அபிவிருத்திக்குத் தளங்களிடும் வகையில் அவை செலுத்தப்படவில்லை. இந்த விடயங்களில் அரசு திறந்த மனதுடனும் தாராளமனதுடனும் செயற்படவில்லை என்பதே பலரது அவதானமாகும். இந்தப் பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடிப்பதால் உலகம் இருட்டாயிருக்குமா என்ன ?

இரண்டு துறைமுகங்களும், ஐந்தாறு மேம்பாலங்களும் ஐம்பது ஹோட்டல்களும் ஐந்நூறு கிலோ மீட்டர் காப்பெற் வீதிகளும் இலங்கையை ஆசியாவின் அதிசமாக ஆக்கிவிட முடியாது. ஆப்படித்தான் என்றால் உலகில் இப்போதுள்ள பின்தங்கிய நாடுகளில் முக்காவாசிக்கு மேலானவை அதிசயம் மிக்க நாடுகளாகிவிடும்.

ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் தான் கூறி வருகின்ற சொற்தொடர் மீது உண்மையான அக்கறை கொண்டவரானால் இலங்கையின் பொருளாதாரத்தை உலக பொருளாதாரங்களோடு அவற்றின் இயங்குநிலையில் வைத்து பூரணமாகவும் தெளிவாகவும் ஆய்வு செய்து அதன் அடிப்படையில் முழுமையான சாத்தியமான நடைமுறைத் திட்டத்தை சரியான கண்ணோட்டத்தில் வகுத்து அவற்றின் ஒவ்வொரு அம்சங்களையும் தீர்மானகரமாக நிறைவேற்றுதல் வேண்டும். அதற்கு அவருக்கு தனது இன நிலையைக் கடந்த பரந்த மனதும் தனது கட்சிநிலையைக் கடந்த உறுதியான நிலைப்பாடும் தேவை.

இலங்கையை ஆசியாவின் அதிசயமாக்குவாரோ! இல்லையோ! இலங்கையை ஆசியாவின் நரகமாக்காமல் தடுக்கும் அரசியல் வாய்ப்பை அவர் பெற்றிருக்கிறார். முதலில் அதற்கு அவர் தனது வல்லமையாகக் காட்டுவாரா? வரலாறு தான் பதில் சொல்ல வேண்டும்.

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் இல 119, பல்கலைக்கழக வீதி, இரத்தினப்பிட்டிய, பொரலஸ்கமுவ சி.ஆர்.சி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.